காங்கேசன்துறை கிளை நூலகம்

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 கார்த்திகை 28 ராபி அவ் 30 இதழ் 306
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 13-12-1985

## இன்ரசிற்றியில் குண்டு வெடித்தது! வழமைபோல் ரயில்சேவை

(கொழும்பு)

காங்கேசன்துறையிலிருந்து நேற்று கொழும்பு சென்ற 'இன்ரசிற்றி' ரயில் கொழும்பு சென்று மருதானை 'இருப்பிடம் திரும்பும் வழியில் குண்டுவெடிப்புக் குள்ளானது.

நேற்றுக் காலை யாழ்ப்பாணத்திலிருந்து 6-31க்கு புறப்பட்ட 'இன்ரசிற்றி' 9-47க்கு அநுராதபுரம் போய்ச் சேர்ந்தது. பின்னர் அங்கிருந்து 9-52க்கு புறப்பட்டு கோட்

(7-ம் பக்கம் பார்க்க)

## வணசிங்கராயர் வழக்கு தீர்ப்பு

(கொழும்பு)

''வணபிதா சிங்கராயர் தமது சுயவிருப்பத்தின் பேரிலேயே இரகசியப் பொலிசாருக்கு வாக்குமூலம் கொடுத்தார் என்பதை நீதிமன்றம் ஏற்றுக்கொள்கிறது.'' என்று கொழும்பு உயர் நீதிமன்றம் வண. பிதா சிங்கராயரின் வழக்கு மீதான தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

உயர்நீதிமன்ற நீதவான் திரு. எச். டபிள்யூ சேனநாயக்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இவ்வழக்கில் நேற்று தீர்ப்பளிக்கப்பட்டது.

(7-ம் பக்கம் பார்க்க)

## விமான விபத்து: 258 அமெரிக்க ராணுவ வீரர்கள் பலி!

[ஒட்டாவா]

கனடாவில் நேற்று நடந்த விமான விபத்தொன்றில், 258 அமெரிக்க இராணுவ வீரர்கள் பலியானர்கள்!

'டி. சி - 8ரக' ஜெட் விமானம் நேற்று நியூபௌன்லன்டில், கென்டர் விமான நிலையத்திலிருந்து புறப்பட்டுச் செல்ல எத்தணிக்கையிலேயே விமானம் வெடித்து சிதறியதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த விமானத்தில் பயணத்தை மேற்கொண்ட அமெரிக்க இராணுவ வீரர்கள் 258 பேரும் இறந்திருக்கலாம் என்ற செய்தியை கனடிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

நியூபௌன்லன்டில் லேபிரடோலில், மொன்றிலுக்கு சுமார் ஆயிரம் கிலோ மீற்றர் வடக்கே அமைந்துள்ள கேன்டர் விமான நிலையம்; அமெரிக்காவுக்கும், ஐரோப்பாவுக்கும் இடையே அத்திலாந்திக் மாகடல் பிரதேசத்துக்கு அப்பால் சேவையில் ஈடுபடும் விமானங்களுக்கு எரிபொருள் வழங்கும் கேந்திர ஸ்தானமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

வெடித்து சிதறிய இந்த விமானம் ஒரு அமெரிக்க கம்பனியார் கம்பனிக்குச் சொந்தமானது. விமான விபத்துக்களின் வரிசையில் 258 இராணுவ வீரர்கள் பலியான பாரிய விமான விபத்து இது என்று வர்ணிக்கப்பட்டுள்ளது! [பி]

## கோட்டை இராணுவம் வெளியே வந்ததும் யாழ்நகர் நேற்று மீண்டும் வெறிச்சோடியது!

### இருவர் பலி! மூவர் படுகாயம்!!

(ஏ. வி, மாணிக்கம்)

**யாழ்ப்பாண நகரம் நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் நேற்று 'கடும் சோதனை'க்குள்ளானது!**

**கோட்டை இராணுவம் நகருக்குள் பிரவேசித்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட பதற்றத்தினால் யாழ்ப்பாணம் மீண்டும் வெறிச்சோடியது! நேற்றைய சம்பவங்களில் இருவர் பலியானார்கள்! காயமடைந்தவர்களில் மூவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.**

யாழ். கோட்டைக்குள்ளிருந்து நேற்று நண்பகல் இராணுவத்தினர் யாழ். நகருக்கு வந்ததைத் தொடர்ந்து நகரில் நடமாடிக் கொண்டிருந்த மக்கள் மத்தியில் பெரும் பதற்ற நிலை தோன்றியது.

ட்ரக், கவச வண்டிகள், பீரங்கி வண்டிகள் சகிதம் மணிக்கூட்டு வீதிவழியாக வந்து கொண்டிருந்த இராணுவத்தினர் வண்ணை வேங்கடேசப் பெருமாள் கோவில் முன்றலை அண்மித்ததும் அங்கு தரித்து நின்றனர். அச்சந்தர்ப்பத்தில் கைக்குண்டுகளும் துப்பாக்கி வெடிச்சத்தங்களும் இடையிடையே கேட்டவண்ணமிருந்தன.

அச்சமடைந்த மக்கள் நகரைவிட்டு தத்தம் இருப்பிடங்களை நாடி விரையத் தொடங்கினர் தூர இடங்களுக்குச் செல்வோரும் புறப்பட்ட வாகனங்களில் ஏறிக்கொண்டனர். வழக்கம் போல நகர்க் கடைகள் யாவும் இழுத்து மூடப்பட்டன. நேரம் செல்லச் செல்ல நகரம் அமைதியுற்றது.

பெருமாள் கோவில் முன்றலில் நின்ற இராணுவத்தினர், தமக்குக் கிடைத்த தகவலின் பேரில் அங்கு இருந்ததாகக் கருதப்படும் தீவிரவாதிகள் முகாமை முற்றுகையிட்டனர். அங்குள்ள வீடுகளில் இருந்த சில பெண்களை இராணுவத்தினர் விசாரணை செய்தனர். குறிப்பிட்டவீட்டை சோதனை நடாத்திய இராணுவத்தினர் பின்னர் அவ்வீட்டை இழுத்துப் பூட்டிவிட்டு கன்னாதிட்டி வீதி வழியாகச் வண்ணை சிவன் கோவில் முன்றலை அடைந்தனர்.

(7-ம்பக்கம் பார்க்க)

## மீண்டும் சீன அரிசி

[கொழும்பு]

சீனாவிடமிருந்து ஏழு கோடி ரூபா பெறுமதியான அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது என்று நேற்று பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

அத்தனகல எம். பி. திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடியின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் மேற்படித் தகவலை வெளியிட்ட நிதிஅமைச்சர் திரு. ரொனி டி மெல்; 'பயங்கரவாதப் பிரச்னை காரணமாகவேதான் சீனாவிலிருந்து அரிசியை இலங்கை இறக்குமதி சய்யவேண்டியுள்ளது' என்று கூறினார்.

## ஈரானிய புத்தகம்; மொகமட் எச்சரிக்கை!

(கொழும்பு)

''முஸ்லிம் மக்களைத் தவறான வழியில் இட்டுச் செல்லும் சில புத்தகங்கள் ஈரானிலிருந்து இலங்கைக்குள் வந்துள்ளன. இவற்றை வாசித்தால் ஒரு கலகமே ஏற்படும்'' என்று போக்கு வரத்து அமைச்சரும், முஸ்லிம் விவகார அமைச்சருமான அல்ஹஜ் எம். எச். மொகமட் பாராளுமன்றத்தில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

''தவறான வழியில் இட்டுச் செல்லும் இப்புத்தகங்கள் பாகிஸ்தானில் விநியோகிக்கப்பட்ட பின்னர் கலகம் மூண்டுள்ளது. நூற்றுக்கு மேற்பட்டவர்கள் மாண்டுள்ளனர். இந்தப் புத்தகங்கள் இலங்கையினுள் புகுந்து விடாது தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை உறுதியாக நான் மேற்கொண்டுள்ளேன்'' என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ய)

## நிர்வாக மாற்றம்?

[கொழும்பு]

வடக்கு, கிழக்கில்; நிர்வாக முறையில் திடீர் மாற்றம் ஏற்படுமா?

அரசியல் வட்டாரங்களில் மேற்படி பூகம்தான் இப்பொழுது பலமாக அடிபடுகிறது!

## அரியாலையில் கோஷ்டி மோதல்; துப்பாக்கிச் சூட்டுக்கு மூன்று இளைஞர்கள் பலி!

### வேறு 2 சம்பவங்களில் நால்வர் மரணம்

[யாழ்ப்பாணம்]

அரியாலைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு மூன்று இளைஞர்கள் துப்பாக்கிச்சூட்டுக்கு பலியாகியுள்ளனர்!

அரியாலையில் இரு கோஷ்டியினருக்கிடையே ஏற்பட்ட தகராறே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

ஒரு பிரச்னை சம்பந்தமாக ஏற்பட்ட வாக் வாதம் கத்தி வெட்டில் முடிந்ததாகவும், இதனைத் தொடர்ந்து ஒரு கோஷ்டி மற்றொரு கோஷ்டி மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் கூறப்படுகிறது.

இத் துப்பாக்கிப் பிரயோகத்தினால், அரியாலையைச் சேர்ந்த டண்டா என்பவரும், கைதடியைச் சேர்ந்த ஜெகதீ

(7ம் பக்கம் பார்க்க)

## ரூபா 2 3/4 லட்சம் கடத்தல் பிடிபட்டது!

[மன்னார்]

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட, இரண்டு லட்சத்து எழுபத்து ஐயாயிரம் ரூபா

(10-ம் பக்கம் பார்க்க)

## ஒருவர் பலி 50 பேர் கைது

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பில் சோதனை நாடாத்திய ஆயுதப்படையினர் சுமார் 50பேரைக் கைது செய்துள்ளனர்.

அதே சமயம் வீதியில் ரோந்து சேவையிலீடுபட்டிருந்த ஆயுதப்படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் ஒருவர் பலியானர். (மா)

## கண்காணிப்புக் குழு இன்று செல்கிறது

[திருகோணமலை]

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு இன்று திருகோணமலைக்கு விஜயம் செய்யவுள்ளது.

நாளையும், நாளைமறுதினமும் திருமலையில் தங்கிநிற்கும் கண்

(10-ம் பக்கம் பார்க்க)

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய PL-4 ரக லேத் மெசின் விற்பனைக்குண்டு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம். 2290

---

(1) பருத்தித்துறை நெல்லண்டை உடையார் வீதியில் 20 காணிகள் மொத்தம் பரப்பு 60தும், (2) பருத்தித்துறை புலோலி மேற்கு தம்பசிட்டி வீதியில் வீடு, கிணறு, வளவு 3½ பரப்பும் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டியவர்: கு. கணபதிப்பிள்ளை, Attorney at Law, புலோலி மேற்கு, பருத்தித்துறை. 2293

---

வலம்புரி சங்கு: தெய்வீக சக்திவாய்ந்த வலம்புரிச்சங்கு, ஆலய பூசை ஆராதனைக்கும், இல்லங்களில் இலட்சுமிகடாட்சம் நிலவுவதற்கும் மாபெரும் பொக்கிசம். உடன் விற்பனைக்குண்டு: தாஸ், மாணவர் அறப்பணி நிலையம். 59, மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை. 2319

---

நல்ல நிலையிலுள்ள சொனி T. V. 20'' கலர், National வீடியோ டெக் E N 7000 விற்பனைக்கு உண்டு. விக்ரர் அன் சன்ஸ், 100, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2323

---

Bairaha Farms புரொயிலர் குஞ்சுகள் 17-ந் திகதி, 24-ந் திகதி செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்க. சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். 2324

---

வீடு வளவு உட்பட 2½ பரப்பு காணி, மின்சார வசதியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: கொள்ளவும். திருமதி லீலா விஜயநாதன், 156/1, அரசடி றோட், நல்லூர். [2343]

---

ஒலிப்பதிவு செய்யப்பட்ட கசெற் - திருவெம்பாவை திருப்பள்ளி எழுச்சி வாரியார் முன்னுரையுடன்-ஒரே கசெற்றில் - பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். [3342]

---

கோப்பாய் வடக்கில் விவசாயம் செய்யக்கூடிய 12½ பரப்புக்காணி, வீடு, நல்லதண்ணீர் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. நவநாதன், பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். [2330]

---

பைராபாம், செற்றுபாம், பிறவுண் மைமன கொக், வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு; வி. ரி. வல்லிபுரம், நந்தாவில் லேன், தாவடி. [2343]

---

தெல்லிப்பழை ஸ்ரேசன் வீதியில் ஆஸ்பத்திரிமுன் ஒரு பரப்பு பன்னிரண்டு குழிகாணி விற்பனைக்குண்டு. கடை அல்லது வீடு கட்டலாம். விபரங்கட்கு:, T. K. துரைராஜசிங்கம், புகையிரத நிலையவீதி. தெல்லிப்பழை. 2338

---

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## தேவை

தென்னந்தும்பு மெசினில் அடித்துப் பழகுபவர்கள் (ஆண்கள்) நேரில் வரவும். தும்பு தேவையானோர் நேரில் விண்ணப்பிக்கவும். வி. சோமசுந்தரம், 68, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2289

**WANTED**

A young R. M. P. with 20 years experience seeks employment. Apply Advt. No. 2304, C/o Eelanadu, Jaffna. 2304

**WANTED**

Retired Government Accontant [Class-I] Aged 58 years seeking suitable employment. Apply Advt. No.-2333 C/o Eelanadu Ltd, Jaffna. [2333]

---

### பின்னுறுதிக் கட்டளைபற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்,

நீர்வேலி, நீர்வேலி மத்தியைச் சேர்ந்த அம்பிகைபாகர் மகள் செல்வி கமலாம்பிகை அல்லது பரமேஸ்வரி என்பவரது மரண சாதனத்தினதும், எழுத்தாவணத்தினதும் விடயத்தில்,

(மரணமெய்தியவர்)

அம்பிகைபாகர் மகள் செல்வி திலகவதி அல்லது பராசக்தி, நீர்வேலி மத்தி, நீர்வேலி.

—எதிராக. மனுதார்.

மரணசாதன நியாயாதிக்கம் } இல: 3821

அம்பிகைபாகர் மகள் புவனேஸ்வரி, நீர்வேலி மத்தி, நீர்வேலி.

—எதிர்வாதி.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1985ம் ஆண்டு ஆடி மாதம் 19ம் திகதியன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுன தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
**கு. குலசிங்கம்,**
பதிவாளர்.

1985ம் ஆண்டு வைகாசி மாதம் 23ந் திகதி.

வரைந்தவர்,
**ச. லோகேஸ்வரன்.**
மனுதாரின் சட்டத்தரணி.
22-11-85

19-7-85ல் இருந்து 14-2-86க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

**கு. குலசிங்கம்,**
பதிவாளர்.
(2292)

---

## COMMERCE DAY CLASS

ஆரம்பம்: 16-12-85 காலை 8 மணி
(வாரத்தில் 20 வகுப்புகளிற்கு கூடுதலான வகுப்புக்கள் நடைபெறும்)

விபரங்கட்கு:
**New Master Institute,**
BMC LANE, JAFFNA.

---

## 86 A/L Day Class

**3-ம் பிரிவு**
ஆரம்பம்: 16-12-85 திங்கள் காலை 11 மணி
**3-ம் பிரிவு**

## 86 A/L Weekend Class

ஆரம்பம்: 15-12-85 ஞாயிறு காலை 9-30 மணி

## Paper Class

**1-ம் பிரிவு**
ஆரம்பம்: 22-12-85 ஞாயிறு நண்பகல் 12-00 மணி

விபரங்கட்கு:
**NEW MASTER INSTITUTE**
BMC LANE, JAFFNA.

---

## அந்தியேட்டி அழைப்பு

அன்னை மடியில் 04-11-1936



ஆண்டவன் மடியில் 13-11-1985

**கணபதிப்பிள்ளை உருத்திரபிள்ளை அவர்களின்**
(மாத்தளை, கணேசன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)
அன்புத் துணைவி

### திருமதி உ. வள்ளிமுத்து (சரஸ்வதி) அவர்கள்

திரு. க. வேலும்மயிலும், திரு. க. செல்லையா, காலஞ்சென்ற திரு.க.கிருஷ்ணபிள்ளை, திரு. க. காசிலிங்கம் என்போரை மைத்துனராகவும், யாழ்.கச்சேரி ஓய்வூதியக்கிளை பிரதம எழுதுவினைஞர் திரு. க. கணபதிப்பிள்ளை, யாழ். நீர்ப்பாசன இலாகா படவரைஞர் திரு. க. கதிர்காமத்தம்பி என்பவர்களை உடன் சகோதரர்களாகவும்,

மாத்தளை, கிளிநொச்சி கணேசன் ஸ்ரோர்ஸ் உரிமையாளரும் பரந்தன் றைஸ் மில் உரிமையாளருமான திரு. வே. கணேசமூர்த்தி, கி. விநாயகமூர்த்தி, கி. உதயமூர்த்தி, கி. சாந்தமூர்த்தி என்போரைப் பெருமக்களாகவும்,

கிளிநொச்சி குகனேஸ்வரன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் திரு. க. சின்னத்தம்பி, செல்வன் க. கலையரசன், க. கருணாநிதி, க. தயாநிதி என்போரை மருமக்களாகவும், சி. மங்களேஸ்வரன், சி. குகனேஸ்வரன், க. கெங்காதரன், தே. சிவனேஸ்வரன் என்போரை பேரப்பிள்ளைகளாகவும் போற்றி மகிழ்ந்தவர்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியை 15-12-1985 ஞாயிறு காலை 10-00 மணியளவில் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

**க. உருத்திரபிள்ளை,**
கணவன்.

அல்வாய் மேற்கு (திக்கம்),
அல்வாய். (2340)

---

### குடியியல் நடைமுறை கோவைச்சட்டத்தின் 325 (2)ம் பிரிவின்கீழ் பிஸ்காலினல் பிறப்பிக்கப்படும் அறிவித்தல்

யாழ்ப்பாண

மாவட்ட நீதிமன்றத்தில்

சண்முகம் குமாரசாமி
நீர்வேலி.
வழக்காளி.

வழ. இல. காணி/4815

எதிராக

1. அம்பலவாணர் இராமுப்பிள்ளை, நெட்டிலிப்பாய், கோண்டாவில்.
2. சண்முகம் மார்க்கண்டு, மேதர் ஒழுங்கை, மானிப்பாய்.
3. மார்க்கண்டு கிரிதரன், மேதர் ஒழுங்கை, மானிப்பாய்.

எதிராளிகள்.

குடியியல் நடைமுறைக் கோவையின் 325-ம் பிரிவின்கீழ் விண்ணப்ப விடயத்தில்.

சண்முகம் குமாரசாமி,
நீர்வேலி.
வழக்காளி-மனுதார்.

எதிராக

1. அம்பலவாணர் இராமுப்பிள்ளை, நெட்டிலிப்பாய், கோண்டாவில்.
2. சண்முகம் மார்க்கண்டு.
3. மார்க்கண்டு கிரிதரன், இருவரும் மேதர், ஒழுங்கை, மானிப்பாய்.
எதிராளிகள் - எதிர் மனுதார்கள்.
4. சின்னப்பு இளையதம்பி, அம்பலவாணர் சுமம், 5-ம் வாய்க்கால் பெரிய பரந்தன்.

எதிர்மனுதார்.

மேலே சொல்லப்பட்ட வழக்கில் அனுப்பப்பட்ட ஆட்சியொப்பாணையை செயல்படுத்துவதற்காக 19-9-85-ம் திகதி கீழே நன்கு விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனத்திற்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற பிஸ்கால் ஆகிய நான் சென்றசமயம் மேற்சொல்லப்பட்ட 4-ம் எதிர்மனுதார் குறித்த ஆதனத்தில் உள்ள வீட்டைப்பூட்டி வெளியே செல்ல மறுத்து ஆட்சியொப்பாணையை செயல்படுத்தாது தடுத்துள்ளார். ஆகையால் கீழ நன்கு விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனத்தின் ஆட்சியை மேற்சொல்லப்பட்ட வழக்காளி மனுதாருக்கு ஒப்படைப்பதற்கு எதுவும் ஆட்சேபனை இருந்தால் மேற்சொல்லப்பட்ட எதிர்மனுதார் அல்லது வேறு யாராகுதல் இவ்வறிவித்தலை விளம்பரம் செய்த நாளில் இருந்து 15 நாட்களுக்குள் தங்கள் உரிமைக்கோரிக்கையை அல்லது ஆட்சேபனையை அணைக்குமாறு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் பச்சிலைப்பள்ளி கரைச்சிப்பகுதி பெரிய பரந்தன் இறை பெரியபரந்தன் காடு அல்லது பரந்தன் காடு. ஏக்கர் 5 றூட் 1 பேச்சஸ் 33, 2/3 கொண்ட துண்டின் எல்லை கிழக்கு நீர்ப்பாசன வாய்க்கால், வடக்கு தில்லையம்பலம் அன் சண்முகத்தின் ஆதனம், மேற்கு நீர் மேவிப்பாயும் வாய்க்கால், தெற்கு ஏ. வி. குலசிங்கத்திற்கும் பங்காளருக்குமுரிய ஆதனம்.

1985-ம் ஆண்டு மார்கழி மாதம் 2-ம் திகதி.

**ஆ. குணநாயகம்.**
பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
சாவகச்சேரி.
(2346)

உலகச் செய்திகள்

## மார்க்கோஸை எதிர்த்து திருமதி அக்கினோ தலைமையில் எதிர்க்கட்சி கூட்டுப்போட்டி!

மணிலா. டிச- 12

**பிலிப்பைன்ஸ் பொதுத்தேர்தலில் கொலையுண்ட எதிர்க்கட்சித் தலைவர் பெனிங்னோ அக்கினோவின் மனைவி திருமதி கரசோன் அக்கினோ ஜனாதிபதி பேர்டினன்ட் மார்க்கோஸை எதிர்த்துப் போட்டியிடவுள்ளார். திருமதி கரசோன் அக்கினோ பிலிப்பைன்ஸ் எதிர்க்கட்சிகளுடன் கூட்டுச்சேர்ந்து தேர்தலில் குதிக்கவுள்ளார்.**

திருமதி அக்கினோ தலைமையிலான இந்த எதிர்க்கட்சிக் கூட்டுப்போட்டி திரு மார்க்கோஸ் அரசுக்குப் பெரும் நெருக்கடியைக் கொடுக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மணிலாவின் ஆயர் தீவிரமாக மேற்கொண்ட முயற்சிகளையடுத்தே இந்த எதிர்க்கட்சிக் கூட்டு ஏற்பட்டுள்ளது. சல்வடோர் லாரி என்பவரே ஆரம்பத்தில் இந்த எதிர்க்கட்சிக் கூட்டுக்களில் அதிபர் பதவிக்குப் போட்டியிடவிருந்தார். ஆனால் திருமதி அக்கினோவிற்காக அவர் உதவி ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடச் சம்மதித்துள்ளார்.

திருமதி கரசோன் அக்கினோ கடந்த ஆண்டு மணிலாவில் கொலையுண்ட தமது கணவரான 'யுனிடோ' கட்சித் தலைவர் அக்கினோவுடன் அமெரிக்காவில் 80-ஆம் முதல் 83-ம் ஆண்டுவரை அரசியல் தஞ்சம் புகுந்திருந்தார்.

எதிர்வரும் பெப்ரவரிமாதம் பிலிப்பைன்ஸில் பொதுத்தேர்தல் இடம்பெறவுள்ளது. இத்தேர்தலில் கடந்த 20 ஆண்டுகளாக ஜனாதிபதி பதவியில் இருந்த திரு பேர்டினன்ட் மார்க்கோஸ் தமது ஆளும் புதிய சமுதாய கட்சி சார்பில் போட்டியிடுகிறார். [கி]

## ராஜீவ் பாதுகாப்புக்கு இஸ்ரேல் நிபுணர் ஆலோசனை!

புதுடில்லி 12

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியின் பாதுகாப்புக் குறித்து இஸ்ரேலிய நிபுணர் ஒருவரின் ஆலோசனை பெறப்பட்டுள்ளது!

புதுடில்லி 'ரேஸ் கோஸ்' வீதியில் ராஜீவ் காந்தியின் புதிய வாசஸ்தலம் அமையவுள்ளது.

இந்த வாசஸ்தலத்தின் அமைவிடம், மற்றும் சுற்றுடல் பாதுகாப்புக் குறித்தே இந்த ஆலோசனை பெறப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக இஸ்ரேலிய நிபுணர் ஒருவர் உண்மையில் புதுடில்லி வந்திருந்தார். இவர் திரு. காந்தியின் புதிய வதிவிடப் பகுதியை நன்குநோட்டமிட்டதையிட்டு வேண்டிய பாதுகாப்பு ஆலோசனைகளை வழங்கினார்.

திரு. காந்தி தற்போது தாம்இருக்கும் இல்லத்திலிருந்து திருமதி காந்தி நினைவாசவும், பாதுகாப்புக் கருதியும் வெளியேறவுள்ளார். அடுத்தாண்டு முதல் அவர் தமது புதிய வாசஸ்தலத்தில் குடியேறுவார். [கி]

## எல்லைக் காந்திக்கு விசேட விமானம்!

புதுடில்லி, டிச 12

காங்கிரஸ் நூற்றாண்டுவிழாக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளும்வகையில் இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் கான்அப்துல் கபார்கானுக்கு இந்திய அரசு விசேட அழைப்பு விடுத்துள்ளது.

எதிர்வரும் 25ம் திகதி இவரை இந்தியா அழைத்துவர ஒரு விசேட இந்திய விமானப்படை விமானம் பாகிஸ்தான் அனுப்படப்படவுள்ளது.

கான்அப்துல் கபார்கான் ஒரு முதுபெரும் இந்திய சுதந்திரப் போராட்ட வீரராவார். இவர் 'எல்லைக் காந்தி' என்று அழைக்கப்படுகிறார். பாகிஸ்தானில் பெஷா நகரில் இவர் வாழ்ந்து வருகிறார். (கி)

## காணிப் பூசல்கள் 200 பேர் இதுவரை பிறேஸிலில் கொலை

லண்டன், டிச 12,

பிறேஸிலில் காணிப்பூசல்களால் இதுவரை 200 பேர் வரை கடந்த 10 மாத காலங்களில் கொலைசெய்யப்பட்டுள்ளனர்.

பிறேஸில் அரசின்காணிச்சீர் திருத்தக்கொள்கை அமுலுக்கு வந்ததையடுத்தே இந்த வன்முறைகள் நேர்ந்துள்ளன.

நிலச்சுவாந்தர்களே கை தேர்ந்த துப்பாக்கி நபர்கள் மூலம் இந்தப்படுகொலைகளைச் செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிறேஸிலில் காணிச்சீர் திருத்த நடவடிக்கைகளின் கீழ் இடம் பெறுகின்ற காணிப் பங்கீடுகளால்பல நிலச்சுவாந்தார்கள் தமது நிலபுலன்களை இழந்து வருகின்றனர். இதனையடுத்தே இவ்வாறு புதிய நிலங்களைப் பெறுபவர்களைக் கொலை செய்துவருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து பிரேஸிலில் பல கண்டனங்கள் தலைதூக்க ஆரம்பித்துள்ளன. [கி]

### அடுத்த வருடம் கனடாவில் 12 ஆயிரம் அகதிகளுக்கு அனுமதி

(லண்டன்)

அடுத்த வருடம் கனடா வெளிநாடுகளிலிருந்து 12 ஆயிரம் அகதிகளை நாட்டுக்குள் அனுமதிக்கும் என்று தெரிய வருகின்றது.

ஏற்கனவே 90 ஆயிரம் அகதிகள் அனுமதிக்கபட்டுள்ளனர். எனவே புதுவருட அனுமதியுடன் மொத்தம் 1 லட்சம் 15 ஆயிரம் அகதிகள் கனடாவில் அனுமதிக்கப்படுவர்.

1987 ம் ஆண்டு அகதிகளின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 25 ஆயிரமாக அதிகரிக்கும் என்று கருதப்படுகிறது.

### ஆயுதத் தொழிற்சாலை 5தமிழரும் கைது

[கொழும்பு]

இம்புலாகல சொவலைக் காட்டுப்பகுதியில் களவாகத் துப்பாக்கிகள் தயாரிப்பில் ஈடுபட்டுவந்த தொழிற்சாலையொன்றை ஆயுதப்படையினர் கண்டுபிடித்துள்ளனர்.

இங்கு தயாரிக்கப்பட்டதாக கருதப்படும் 5 துப்பாக்கிகளைக் கைபற்றியுள்ளதுடன் பலரையும் ஆயுதப்படையினர் கைது செய்துள்ளனர், இவர்களில் 5 பேர்தமிழர்கள் என்று கூறப்படுகின்றது. தீவிரவாதிகளுக்கு இத்தொழிற்சாலை ஆயுதம் வழங்கி வந்ததாகக் கருதப்படுகின்றது;

### மணிக்கோபுர கும்பாபிஷேகம்

[யாழ்ப்பாணம்]

காரைநகர் மணற்காடு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் கோவில் மணிக்கோபுர கும்பாபிஷேகம் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். அன்று இவ்வாலயத்தில் எழுந்தருளியிருக்கும் விநாயகர், வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியர், வைரவர், சண்டேஸ்வரி ஆகிய மூர்த்திகளுக்கும் கும்பாபிஷேகம் நிகழும்.

இக்கும்பாபிஷேகக் கிரியைகள் (இன்று) வியாழக்கிழமை காலைஆரம்பமாகும். (ப)

### இணக்க சபை

[பூநகரி]

பூநகரி நல்லூர் ஆலங்கேணி இணக்கசபை நிர்வாகிகள் விபரம் வருமாறு:

தலைவர்: வே. பாலசுப்பிரமணியம், துணைத்தலைவர்; த. முருகேசம்பிள்ளை, செயலாளர்; க. நவீந்திரராசா, உபசெயலாளர்: க. தெய்வேந்திரம், பொருளாளர் சி. தாமோதரம்பிள்ளை, நிர்வாக உறுப்பினர்கள்: து. ஆனந்தராசா, செ. சின்னராசா, க. நாகேஸ்வரன், சி. இராசேந்திரம், பொ. சந்திரன். ந. அருந்தவநாயகி, சி. சுந்தராம்பாள்.

## தமிழகத்தில் ஆசிரியர்கள் போராட்டம் வாபஸ்!

சென்னை டிச, 12.

தமிழகத்தில் இடம்பெற்ற ஆசிரியர் போராட்டம் வாபஸ் பெறப்பட்டுள்ளது. நேற்று முதலமைச்சர் எம். ஜி. ஆருடன் இடம்பெற்ற தமிழக ஆசிரிய தொழிற் சங்கங்களின் 3மணி நேரப் பேச்சையடுத்தே இப்போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது.

இதனையடுத்தே ஆசிரியர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கப்படுமென்றும், கடந்த வாரம் இடம்பெற்ற போராட்டங்களில கைதான ஆசிரியர்கள்அனைவரும் விடுதலையாவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த உறுதிமொழிகளையடுத்து திங்கட்கிழமை முதல் ஆசிரியர்கள் தமது போராட்டங்களை விலக்கிக்கொள்வார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது. [கி

### மூதூரில் ஒருவர் பலி!

[திருகோணமலை]

மூதூரில் கடமையாற்றும் மலேரியாத் தடுப்பு இயக்க உத்தியோகத்தர் ஒருவர் ஆயுதப்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

நேற்று முன்தினம் பிற்பகல் இச்சம்பவம் இடம்பெற்றது.

கல்குவாரியைச் சேர்ந்த கபிரியல் பைவா சிப்ரியன்பைவா [35 வயது] என்பவரே பலியானவராவார். [ய-மா]

## 'கரும்புலி'ப் பாய்ச்சலுக்கு பெண் பலி!

மிச்சிகன், டிச 12

கரும்புலி ஒன்று பாய்ந்ததில் மிருகக் காட்சிச் சாலைப் பெண் ஊழியர் ஒருவர் கொல்லப்பட்டார். இச் சம்பவம் அமெரிக்காவின் மிச்சிகன் மாநில மிருகக் காட்சிச்சாலையில் நிகழ்ந்தது

காலிபூத் (வயது 30) என்ற அந்தப் பெண் ஊழியர் மிருகக்காட்சிச்சாலையில் மூடப்படும் நேரம்மிருகங்களை இறுதித்தடவையாக நோட்டமிட்டு வந்துள்ளார்.

அப்போது தனதுகூட்டிலிருந்து வெளியே வந்த தென் அமெரிக்காவைச் சேர்ந்த கரும்புலி ஒன்று (Jazuar) பதுங்கியிருந்து இப்பெண்மீது பாய்ந்து, அவரைக் கடித்துக் குதறியது.

இப்புலியின் எடை 220 றாத்தல்கள் என்று தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து மிருகக் காட்சிச்சாலை அதிகாரிகள் துப்பாக்கி மூலமாக மயக்க மருந்தை அப்புலிமீது செலுத்தி அதனை மடக்கிப் பிடித்து மீண்டும் கூண்டினுள் போட்டனர்.

இச்சம்பவம் கடந்த 10ம் திகதி இடம்பெற்றது. அம் மிருகக் காட்சிச்சாலை அந்தப் பெண் ஊழியருக்கு அஞ்சலி செலுத்தும்வகையில் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. [கி]

## "கோட்பாடுகளை இலக்கியத்தில் வெளிப்படையாகச் சொல்லக் கூடாது"

### வெளியீட்டு விழாவில் பேச்சு

(யாழ்ப்பாணம்)

சிரித்திரன் வெளியீடாக மலர்ந்திருக்கும் பல்துறைசார்ந்த 19 கலைஞர்களின் செவ்வித் தொகுப்பு நூலான 'தேன் பொழுது' வெளியீட்டு விழா கடந்த 7ம் திகதி சனிக்கிழமை மாலை 3 மணிக்கு பருத்தித்துறை சிவன்கோவிலடிபார்வதி வர்த்தனி கலா மண்டபத்தில் விமரிசையாக நடைபெற்றது. பொன் பூலோகசிங்கம், டாக்டர் கனக சுகுமார் இருவரும் இக்கலைஞர்களைச் செவ்வி கண்டிருந்தனர்.

விழாவிற்குத் தலைமைவகித்த டாக்டர்எம். கே. முருகானந்தன் பேசுகையில், "இன்று தேசியரீதியாகவும், கலை, கலாசார ரீதியாகவும் தமிழ் மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டு வருகிறார்கள். ஐரிஷ் மக்களும் இஸ்ரேலியர்களும் தாம் அடக்கி ஒடுக்கப்பட்ட போது புதிய வீறுடன் கிளர்ந்து கலாசார நிகழ்வுகளைத்தந்தார்கள். அதுபோன்று ஈழத்திலும் இத்தகைய நூல்கள் இன்னும் வெளிவரவேண்டும். அதுவும் இலங்கையிலேயே வெளியிடப்படவேண்டும்'' என்றார்.

அறிமுகவுரையை திக்கவயல் தர்மகுல சிங்கம் நிகழ்த்தினார்.

நூலின் முதற்பிரதியை பிரபல புரைப்படக் கலைஞரும் தொழிலதிபருமான குகன் ஸ்ருடியோ அதிபர் திரு. அ. நாகரட்ணம் பெற்றுக் கொண்டார்.

கலாநிதி நா.சுப்பிரமணியஐயர் தமது ஆய்வுரை நிகழ்த்து

(9-ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

வெள்ளத்தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக்கெடும்.

— குறள்.

## நமது நோக்கு

# தொல்லை கொடுக்கவில்லை
## தொண்டமான் நீதி கேட்கிறார்!

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன சமயோசிதமாகப் பகிடிவிடுவதில் வல்லவர். நாடே தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தாலும்-அந்தக் கவலையில் மூழ்கிக் கிடப்போர் மத்தியில் பளிச்சென ஒரு பகிடியை வீசிக் கிளுகிளுப்பை ஏற்படுத்திவிடுவார். அதில் பகிடியும் இருக்கும்; சில சமயம் அவர் மனதில் அழுந்திப்போய்க் கிடக்கும் அங்கலாய்ப்பும் வெளிப்படும்.

அண்மையில் பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஸியாஹுல் ஹக்கிற்கு அளிக்கப்பட்ட விருந்துபசாரத்தின் போது அமைச்சர் திரு. எஸ். தொண்டமானைச் சுட்டிக்காட்டி, ''இவரும் தொல்லை தருகிறார்'' என்று பாகிஸ்தான் ஜனாதிபதியிடம் பகிடியாகக் கூறினாராம் திரு. ஜெயவர்த்தன.

ஜனாதிபதி அவர்களால் அண்மைக் காலத்தில் வெளிநாடு செல்லக்கூடிய சாத்தியமில்லையென்பதைக் குறிக்கவே தொண்டமானையும் சுட்டிக் காட்டியுள்ளார் அவர்.

நாட்டில் இன்றுள்ள சிக்கலான நிலைமைக்கும், திரு. தொண்டமான் சார்ந்துள்ள இனத்துக்கும், திரு. ஜெயவர்த்தன தலைமை வகிக்கும் அரசியல் கட்சிக்கும் நெருங்கிய தொடர்புண்டு.

நாடு சுதந்திரம் பெற்ற காலத்தில் ஏனைய மக்களைப் போல் சகல உரிமைகளையும் அனுபவித்துக் கொண்டிருந்த இந்த மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் குறுகிய அரசியல் நோக்கம் காரணமாக உருவான சட்டங்களால் வாக்குரிமை, குடியுரிமைகள் அனைத்தையும் இழந்தனர்.

நாட்டின் பொருளாதாரத்தின் பெரும் பகுதியைத் தம் கடின உழைப்பால் கட்டி எழுப்புவதற்குமட்டும் பயன்படுத்தப்படும் அடிமைகளாய் அவர்கள் மலையகத்தின் தோட்டப்புறங்களில் ஒதுக்கப்பட்டுவிட்டனர். இழந்துவிட்ட தம் உரிமைகளை வென்றெடுக்கும் வகையில் தனித்தோ அன்றில் ஏனைய மக்களின் ஆதரவுடனோ பெரும் எடுப்பில் போராட்டம் எதையும் நடத்துவதற்கான எந்தவித வாய்ப்பும் இல்லாதவாறு இனம், மதம், மொழி, பொருளாதார வகைகளில் எல்லாம் அவர்கள் துவேஷத்திற்குள்ளாக்கப்பட்டு ஒதுக்கித் தள்ளப்பட்டனர்.

காலத்துக்குக் காலம் ஏற்பட்ட இனக் கலவரங்களும் கூட அந்த ஏழை மக்களையே பெரிதும் பாதித்துவந்துள்ளன.

சிங்கள மக்களால் சூழப்பட்டும், இனவாத அரசியல் கட்சிகளால் பகடைக்காய்களாகப் பயன்படுத்தப்பட்டும் வரும் இம்மக்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதில் அவர்களின் தலைவர்கள் மிகுந்த சாணக்கியத்தோடும், எச்சரிக்கையோடும் செயற்படுவது அவசியமாகின்றது. பதவியிலிருந்த அரசியற்கட்சிகளோடு அவ்வப்போது ஒத்துழைத்தும், சில சமயம் எதிர்த்துப் போராட்டம் நடத்தியும் சிறுசிறு சலுகைகளையே இவர்களால் இதுவரை பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது.

பாராளுமன்றத்தில் ஒரு சமயம் ஏறத்தாழ எட்டு உறுப்பினர்களைக் கொண்டிருந்த மலையகத் தமிழர்களுக்காக இன்று ஒரே ஒருவர்; அதுவும் ஒரு தொகுதியில் மூன்றாவது உறுப்பினராக இருக்கும் அவல நிலை.

நாட்டின் இனப் பிரச்னை சுமுகமாகத் தீர்த்துவைக்கப் படுமென்ற வாக்குறுதியுடன் பதவிக்கு வந்த இன்றைய அரசாங்கம், அப்பிரச்னை பரவலாகி நாட்டையே சிதறடிக்கும் விதத்தில் இன்றைய அவலத்துக்குள்ளாவதற்கு இடம் கொடுத்துவிட்டமை ஒருபுறமிருக்க, எந்த நம்பிக்கையுடன் இவ்வரசுடன் திரு. தொண்டமானின் இ.தொ. காங்கிரஸ் சேர்ந்துகொண்டதோ அந்த நம்பிக்கையையும் கூட நிறைவேற்றத் தவறிவிட்டது.

இந்த நிலைமையில் இ. தொ. கா. போன்ற மலையக மக்களின் பெரும் ஆதரவைப் பெற்ற ஸ்தாபனம் என்னசெய்யலாம்?

ஏற்கனவே பல வகையிலும் நொந்து போய்க் கிடக்கும் தம்மக்கள் மேலும் பரிதாபத்துக்குள்ளாகாதவகையில் எதிர்கால விளைவுகளைப்பற்றி நன்கு தெளிவுபடுத்திக் கொண்டு இன்றைய சூழ்நிலைகளுக்கேற்றவகையில் உறுதியான போராட்டங்களை முன்னெடுப்பது ஒரு வழிமுறையாகும்.

அந்தவகையில் ஒரு திட்டத்தை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இன்று பகிரங்கப்படுத்தியுள்ளது. 1986ம் ஆண்டு சமாதானம், நட்புறவு, தேசிய சமரசம் நிலவும் ஆண்டாக அமைய வேண்டுமென அது பிரகடனப்படுத்தியுள்ளதுடன், வரும் பொங்கல் தினத்திலிருந்து தமிழ் - சிங்கள புதுவருடப்பிறப்பு வரையான காலப்பகுதியை தியானம், கூட்டுப்பிரார்த்தனை மூலமும், அமைதியான பேச்சுவார்த்தை மூலமும் பிரச்னைக்குத் தீர்வுகாண முயல்வது இத்திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கையாகும். குறித்த காலத்தில் தொழிலாளர்கள் காலை அரைநாள் பிரார்த்தனையிலும் மாலை அரைநாள் வேலை செய்வதிலும் ஈடுபடுவர் என்று தெரிகின்றது.

தொழில்துறையும் பாதிக்கப்படாமல் தொழிலாளரும் பாதிக்கப்படாமல் இனத்துவேஷக் கெடுபிடிகள் வளர்வதற்கும் இடம் கொடாமல் இப்படியான ஒரு போராட்டத்தை வகுப்பதற்கு இ. தொ. கா. தலைவர்கள் பெரிதும் முயற்சி எடுத்துள்ளனர் என்று தெரிகின்றது. இது எவ்வளவு தூரம் வெற்றிதரும் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஆனால் நாட்டின் நிலைமைகளை உத்தேசிக்கையில் இதைத் தவிர வேறு எதைத்தான் அவர்களால் செய்யமுடியும்?

எனவே இந்த மக்களின் உரிமைகளை விரைந்து வழங்குவதற்கு வழிகளை தேடுவதைவிடுத்து தொண்டமானும் தொல்லைதருகிறார் என ஜனாதிபதி திரு. ஜயவர்த்தன அங்கலாய்ப்பதில் அர்த்தமில்லை.

### சேலத்தில் இன்று நடைபெறும்
# உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் மகாநாடு

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் மூன்றாவது சர்வதேசமகாநாடு இன்று வெள்ளிக்கிழமை 13-ம் திகதி சேலம் மாநகரில் ஆரம்பமாகி மூன்றுநாட்கள் தொடர்ச்சியாக நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது சேலம் மாநகரில் உலகளாவிய ஒரு தமிழ்மாநாடு நடைபெறுவது இதுவே முதல் தடவையாகும். உலகின் பல பாகங்களிலும் உள்ள நாற்பதுக்கு மேற்பட்ட நாடுகளிலிருந்து ஆயிரத்திற்கும் அதிகமான பிரதிநிதிகள் இன்று சேலத்திலுள்ள விஜய ராகவாச்சாரியார் மண்டபத்தில் கூடி உலகின் பலபாகங்களிலும் வாழும் தமிழ்மக்களது கலை, கலாசாரம், பண்பாடு போன்றவற்றின் தனித்தன்மைகள் அழிந்துவிடாது பேணிப் பாதுகாப்பதற்காக ஆக்கபூர்வமா எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பதை ஆராய்வார்கள். ஒவ்வொரு நாட்டுப் பிரதிநிதிகளும் தத்தமது நாடுகளில் தமிழ்க்கலை, கலாசாரம் பண்பாட்டு உரிமைகளுக்கு இருக்கும் அச்சுறுத்தல்கள், சிதைவுகள் பற்றி ஆய்வரங்கில் பல ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்து உரைநிகழ்த்துகிறார்கள்.

### இயக்கத்தின் தோற்றம்

உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கம் 1974-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் வைத்து முதன் முதலாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. அப்போது நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டிற்கு வருகை தந்திருந்த உலகத் தமிழ் அறிஞர்கள் ஒன்றுகூடி இந்த அமைப்பை உருவாக்கினார்கள் பேராசிரியர் சாலை இளந்திரையன், வண. பிதா தனிநாயகம் அடிகளார், பேராசிரியர் சு. வித்தியானந்தன் போன்றோர் இந்த அமைப்பை உருவாக்குவதில் பெரும் பங்கு வகித்தார்கள், இதன்பின்னர் படிப்படியாக உலகின் பல பாகங்களிலும் இந்த அமைப்பிற்குக் கிளை ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டன. இன்று மொத்தமாக முப்பது கிளைகள் உலகின் பல பாகங்களிலும் அமைந்துள்ளன. இக்கிளை ஸ்தாபனங்களை நிறுவுவதில் மலேசியாவைச் சேர்ந்த தமிழ் அறிஞரான திரு. இரா. ந. வீரப்பன் அவர்கள் பெரும் பங்காற்றினார். அவர் ஒவ்வொரு நாட்டிற்கும் தாமே நேரில் சென்று இக்கிளை ஸ்தாபனங்களை உருவாக்கினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்,

### முன்னைய மகாநாடுகள்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் முதல் மகாநாடு சென்னைமாநகரில் 1977-ஆண்டு முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. இம்மகாநாடு உலகின் பலபாகங்களிலும் வாழும் தமிழ்மக்களது கல்வி நிலை, கலாசார சீரழிவுகள் பண்பாட்டுப் பாதிப்புகள் தமிழ்மொழியைக் கல்லூரிகளில் தொடர்ந்து கற்கமுடியாதுள்ளமையால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் பற்றித் தமிழக மக்களது கவனத்திற்குக் கொண்டு வந்தது. இதனால் கலைஞர் கருணாநிதி அவர்கள் மொரீஷியசில் வாழும் தமிழ்க்குழந்தைகள் தமிழ்மொழியைக் கற்க வசதி செய்யும் வகையில் பெருந்தொகையான தமிழ்ப்பாட நூல்களை மொரீஷியசிற்கு அனுப்பி வைத்தார்.

இரண்டாவது மகாநாடு மொரீஷியசில் நடைபெற்றது. தமிழரான மொரீஷியஸ் உதவிப் பிரதமர் திரு. வீரசாமி ரெங்காடு அவர்கள் இதற்குத் தலைமை வகித்தார். உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கத்தின் மொரீஷியஸ் பிரமுகரான தங்கணமுத்து அவர்கள் மகாநாட்டை முன்னின்று நடத்தினார். இப்போது நடைபெறும் மூன்றாவது மகாநாடு உலகின் பல பாகங்களிலும் வாழும் தமிழ்மக்களது வாழ்விட உரிமைகள் கலாசாரம் பண்பாடு இவற்றைத் தொடர்ந்து பேணிக்காப்பதில் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் தொடர்பாக ஆராய்ந்து தீர்க்கமான பல முடிவுகளை எடுக்க விருப்பதாகத் தெரிகிறது.

**பொன். பூலோகசிங்கம்**

### பிள்ளையார்கதை



விக்கிரமாதித்தனின் நகர ஊர்ப்புறத்திலிருந்த ஔவையின் குடிசைக்குக் கடைசியாக இலக்கணசுந்தரி சென்றாள். தவபலமும் விநாயகருளும் மிக்க ஔவை இக்கணசுந்தரியைத்தன் வீட்டிலிருக்கவிட்டுசிலகாரியங்களுக்காக ஊருள் சென்றாள். அங்குள்ளவர் ஔவையைப் பழித்தும் கல்லெறிந்தும் துன்புறுத்தினர். வீடுதிரும்பிய ஔவை 'உனக்கு மட்டுமன்றி நீ தங்கியிருக்கும் இடத்திலிருப்பவர்களுக்கும் துன்பமேற்படுத்தும் நீ யார்? என்று கேட்க இலக்கணசுந்தரி தான் ஒரு அரசன் மகள் என்பதையும விக்கிரமாதித்தன் மனைவி என்பதையும் கூறினாள்.

தன்னையடைந்தவர்களின் பாபத்தை அறியும் வல்லமையும் அவர்களைப் பாபத்திலிருந்து விடுவித்து நன்மையடையச்செய்யும் திறமையுமாகிய சைவசமயக்குருமாருக்குரிய இயல்பு உடைய ஔவை இலக்கணசுந்தரிக்கு இரங்கி உதவத்திருவுளம் கொண்டாள்.

கந்தபுராணம் - பெரியபுராணம் - இராமாயணம் போன்ற முழுஇலட்சிய நூல்களைப் பூசித்து கயிறுசாத்திப் பார்த்து பிரச்சினையையும், தீர்வையும் உணரும் நம் சம்பிரதாயப்படி புத்தகத்துக்கு நூல் சாத்திப் பார்த்து விரத அநுட்டானத்தில் ஏற்பட்ட தவறே இலக்கணசுந்தரியின் துன்பங்களுக்குக் காரணம் என்பதை ஔவை கண்டு பிடித்தாள்.

இலக்கணசுந்தரி விரதமிருந்த காலத்தில் மேற்கொண்ட நியமம், விநாயக விசுவாசம் என்பனவே அவளைத் தகுதியான குரு ஒருவரை அடுத்து நன்மையுற வாய்ப்பாக இருந்தது என்பது பிள்ளையார்கதை மூலம் நாம் உணரவேண்டிய நுட்பமாக தத்துவமாகும்.

-அருளாளன்

# அன்றைய போட்டியில் நடந்ததென்ன?

30-12-85ல் அரியாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற 7பேர் கொண்ட லீக் உதைபந்தாட்டப் போட்டியில் ஏற்பட்ட குழப்பநிலை காரணமாக 3-12-85ம் திகதி வெளிவந்த ஈழநாடு பத்திரிகையில் உண்மைக்கு மாறாக விளையாட்டு வீரரின் சங்கிலி அறுத்ததாகவும் விளையாட்டில் வன்செயல் ஏற்படுத்தியதாகவும், குறிப்பிட்டு கடிதம் ஒன்று பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## மக்கள் கருத்து


அன்று நடைபெற்ற போட்டியிலே வன்செயல் ஆரம்பமாவதற்கு காரண கர்த்தா யார்? எந்தக் கழக வீரரினால் வன்செயல் ஆரம்பிக்கப்பட்டது? என்ற உண்மை மறைக்கப்பட்டுள்ளது.

பலதரப்பட்ட விளையாட்டுப் போட்டிகளிலே உதைபந்தாட்டப்போட்டிஎன்பது ரசிப்பானதும் உணர்ச்சிகரமானதுமான ஒருபோட்டி. இப்போட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது ஆதரவாளர்கள் மத்தியிலே அபிமானமும் ஆவேசமும் ஏற்படுவது சகஜ நிலை. இந்நிலையிலே ஒரு கோஷ்டி வீரர் வன்செயலில் ஈடுபடும் சூழ்நிலையிலே வன்செயல் ஏற்படுவது தவிர்க்க முடியாததொன்று இதை மிகவும் பாரதூரமாக நினைத்து அந்தக் கோஷ்டியையோ அந்தக் கோஷ்டி சார்ந்த ஊரையோ குறைகூறமுடியாது. ஏனெனில் விளையாட்டுப் போட்டிக்கு வரும்பொழுது வன்செயல் புரியவேண்டும் என நினைத்தோ, திட்டமிட்டோ எமது கழகமோ ஆதரவாளர்களோ தவறான நோக்கத்துடன் வருவதில்லை என்பதை ஆணித்தரமாக கூறி வைக்க விரும்புகிறேன். சூழ்நிலைக்கேற்ப இப்படியான போட்டிகளில் வன்செயல்கள் ஏற்படுவது இங்கு மட்டுமல்ல சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் கூட சகஜம்.

கிறீன்பீல்ட் கழக வீரரின் சங்கிலியை அறுத்து எடுக்கும் பண்புகெட்ட நிலைக்கு எமது குருநகர் பாடும்மீன்கழக வீரர்களோ, ஆதரவாளர்களோ இல்லையென்பதை ஆணித்தர

(5ம் பக்கம் பார்க்க)





முகமாலை வள்ளிமனை விநாயகருக்கு புதிதாக அமைக்கப்பட்ட ஆலயத்தில் அண்மையில் மகா கும்பாபிஷேகம் இடம்பெற்றது, மூவருக்கு ஆராதனை நடப்பதையும் பிரதான கும்பம் வீதிவலம் வரும் காட்சியையும் படங்களில் காணலாம்.

## ஒலிபரப்பு நேரம்

[யாழ்ப்பாணம்]

'ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி' (ஈ. பி. ஆர். எல். எவ்) தமது 'ஈழவானொலி' ஒலிபரப்பு நேரம் நேரங்கள் பற்றி 'ஈழம் செய்திப்பலகையில் தெரிவித்துள்ளது.

புதன்: பி. ப 3 மணி - இரவு 8 மணி [மறு ஒலிபரப்பு]: வியாழன்: பி. ப 3 மணி [மறு ஒலிபரப்பு]; சனி: பி. ப. 3 மணி - இரவு 8 மணி [மறு ஒலிபரப்பு]; ஞாயிறு: பி. ப. 1 மணி - இரவு; 8 மணி [மறு ஒலிபரப்பு].

அலைவரிசை: SW 1, SW 41 M, 7010 KHZ.

## "மாணவன் குமரேசன் மனநோயாளியல்ல"

### மரணம் 'கொலை' எனத் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

"யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியில் ஜி.சி.ஈ. (உயர் தரம்) பரீட்சை எழுதிவிட்டு, முடிவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார் குமரேசன். இவர் மனநோயால் பீடிக்கப்பட்டிருக்கவில்லை. குடும்பத்திற்கு ஒரே பிள்ளையான இவர், பத்து வருடங்களுக்கு முன் தாயை இழந்தார். தகப்பன் கொழும்பில் இருக்க, இவர் இங்கு தனியாக இருந்து படித்துவந்தார்."

உடுவில் கிழக்கைச் சேர்ந்த நடராசா குமரேசனின் (வயது 23) மரண விசாரணையில் சாட்சியமளித்த குமரேசனின் மைத்துனர் டாக்டர் க. பாலகுமார் மேற்கண்டவாறு கூறினர்.

யாழ். பதில் நீதவான் க. சேவன் மரண விசாரணை நடத்தினர்.

பாலகுமார் தமது சாட்சியத்தில் மேலும் தெரிவித்ததாவது:

"நவம்பர் 26ந் திகதி அதிகாலை 5-30 மணிக்குத் தான் வீட்டிலிருக்கும்போது சந்தன வைரவர் கோவிலடியில் குமரேசன் இறந்துகிடப்பதாகச் சிலர் வந்து தெரிவித்தனர். நான் சென்றபோது பொதுமக்கள் சடலத்தைப் பார்த்துக் கொண்டு நின்றனர். இறந்தவர் பச்சைநிற சாரமும், வெள்ளைச் சேட்டும் அணிந்திருந்தார். இவரது வாயினுல் இரத்தம் வழிந்தபடி இருந்தது. கிராமசேவை அலுவலர்மூலம் சடலத்தை யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தேன்".

கிராமசேவை அலுவலர் வி. தில்லைநடராசா, இறந்தவரின் சிறிய தந்தை சி. பொன்னம்பலம், சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் பரிமேலழகர் ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

யாழ். பதில் நீதவான் 'கொலை' எனத் தீர்ப்பளித்து, மேல் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டார். [க]

## யாழ்.நகர சுகாதாரசேவை ஸ்தம்பிக்கும் அபாயம்!

### ஆணையாளர் அச்சம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான மற்றொரு 'ட்ராக்டர்' கடத்தப்பட்டுள்ளது. இதனைத் திருப்பி ஒப்படைக்காதவிடத்து அத்தியாவசிய சுகாதார சேவையான நகர சுத்திகரிப்புச் சேவை ஸ்தம்பிதமடையக்கூடும்''.

யாழ். மாநகர ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

''பொதுமக்கள், வரியிறுப்பாளர்களது பொதுச் சுகாதாரத்தைப் பேணும் பொருட்டே யாழ்ப்பாண மாநகரசபை நகர சுத்திகரிப்பு வேலைகளைப் பலத்த சிரமங்களின் மத்தியிலும்நிறைவேற்றி வருகின்றது.

எரிபொருள் தட்டுப்பாடு, உதிரிப்பாகங்களின் தட்டுப்பாடு போன்ற நிர்ப்பந்தங்கள் எதிர்கொண்ட வேளையிலும் மேற்படி அத்தியாவசிய சேவையைத் தடையின்றித் தொடர வேண்டிய நிர்ப்பந்தமான பொறுப்பு யாழ்ப்பாண மாநகர சபையை எதிர்நோக்கியுள்ளது.

அத்தகைய சூழ்நிலையில் இச்சபைக்குச் சொந்தமான ஐந்து ட்ராக்டர்கள் கடத்தப்பட்ட நிலையிலும் நகர சுத்திகரிப்பு வேலைகளைப் பலத்த இக்கட்டுகள் மத்தியில் இச்சபை நிறைவேற்றிவருகிறது.

அப்படிப்பட்ட இக்கட்டுகளின் மத்தியில் இச்சபைக்குச் சொந்தமான மற்றுமொரு ட்ராக்டர் மூன்று நாட்களுக்கு முன்பாகக் கடத்தப்பட்டிருக்கிறது.

கடத்தப்பட்ட ட்ராக்டர்கள் திரும்ப ஒப்படைக்கப்படாதவிடத்து இந்நகரின் அத்தியாவசிய சுகாதார சேவை ஸ்தம்பிதமடையக்கூடும் என அஞ்சவேண்டியுள்ளது. இதனுல் தொற்று நோய்கள் பரவும் ஆபத்தும் உண்டு.

ஆகவே, மேற்படி ட்ராக்டர்கள் கடத்தப்பட்டதில் சம்பந்தப்பட்டவர்கள் எவராக இருந்தாலும் பொதுநல நோக்குடன் அவற்றை இச்சபையிடம் உடன் ஒப்படைக்கும்படி வெகுதயவாக வேண்டுகிறேன்''.

## "கிறிஸ்தவம் தமிழர் பண்பாட்டுக்கு முரண்பாடானது அல்ல"

### கிறிஸ்மஸ் ஒளிவிழாவில் பேச்சு

[யாழ்ப்பாணம்]

காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரியின் கிறிஸ்தவ ஆசிரியர் மாணவ ஒன்றியம் தமது வருடாந்த கிறிஸ்மஸ் ஒளிவிழாவை இம்மாதம் 4ம் திகதி கல்லூரி மண்டபத்தில் கொண்டாடியது.

பாடசாலை அதிபர் திரு. பாலசிங்கமும் மயிலிட்டி/ ஊறணி பங்குத்தந்தை அருட்திரு. தேவராஜன் அடிகளா குத்துவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர்.

விழாவில் ஆரம்ப உரை நிகவ்த்திய திரு.ம.ஜீவரட்ணம் ''இத்தகைய ஒளிவிழாக்கள் கிறிஸ்தவ கோட்பாடுகளை விளக்கவும் தெளிவுபடுத்தவும் உதவுகின்றன. கிறிஸ்தவம் தமிழர் பண்பாட்டுக்கும் பாரம்பரியத்துக்கும் முரண்பாடானது என்ற கருத்தினுல் எழும் மயக்கத்தைத் தெளிவுபடுத்த உதவுகின்றது. கிறிஸ்தவம் உலகின் பெரும்பான்மையான மக்களால் பின்பற்றப்படுகிறது, ஏறத்தாழ எல்லா நாடுகளிலும் பரவியிருக்கிறது. காரணம் நாட்டின் அந்தந்த இன மக்களின் கலாசாரம் பண்பாடுகளோடு இணைந்து செல்லக் கூடிய மறையாக விளங்குவதுதான். காலத்துக்கேற்ப தன்னை நெகிழ்ந்து மக்களுக்காக மதமே தவிர மதத்துக்காக மக்களல்ல என்ற மகோந்நத கோட்பாட்டை மையமாகக் கொண்டது'' என்ருர்.

அதிபர் தமது சிறப்புரையில் ''இக்கல்லூரியில் பெரும்பான்மையாக சைவ சமய மாணவர்கள் கல்விபயின்ற போதிலும் சைவத்தையும் கிறிஸ்தவத்தையும் இரு கண்களாக பேணிபோதிக்கப்பட்டு வருகின்றன'' என்ருர்.

பங்குத்தந்தை அருட்திரு தேவராஜன் தமது அருளுரையில் ''ஆண்டவன் குழந்தையாகப் பிறந்தநாளைக் கொண்டாடும் நாம் அனைவரும் குழந்தையுள்ளம் படைத்தவர்களாக மாறவேண்டும். குழந்தைகளிடம் காணப்படும் அப்பாவித்தனம், தாழ்ச்சி, பொறுமை,மன்னிக்கும்பண்பு, பகிர்ந்துஉண்ணல்என்ற ஆகிய குணங்கள் எம்மிடம் மிளிர வேண்டும். இவைகளில்லாமல் எமக்கு ஆன் மீக விடுதலையோ, உலக அடிமைத்தனத்திலின்றும் விடுதலையோ கிடைக்காது. கிடைத்தாலும் நிலைக்காது'' என்ருர்.

கல்லூரி மாணவ, மாணவியர், கரோல் பாட்டு, நாடகம் நடனம் ஆகிய நிகழ்ச்சிகளை நடத்தினர் மறை ஆசிரியர் திரு. இ. ம. ஜெயசீலன் நன்றியுரை கூறினர்.

## ஒளிவிழா

[சுண்டுக்குளி]

நவாலி மகாவித்தியாலயத்தில் வித்தியாலய அதிபர் திரு. செ. கதிர்காமத்தம்பியின் தலைமையில் ஒளிவிழா கொண்டாடப்பட்டது.

விழாவுக்குச் சிறப்பு விருந்தினராக அருட்திரு சகோதரர் சாம் இராசசூரியர் கலந்துகொண்டு அருளுரை வழங்கினுர். பின்னர் பாடசாலை மாணவர்களினுல் யேசு பாலனின் பிறப்பைப் பாட்டாகவும், நாடகமாகவும் நடித்துக் காண்பிக்கப்பட்டது.

இறுதியில் பரிசில்கள் வழங்கியபின் தேநீர் விருந்து நடைபெற்றது.

### லயன்ஸ் கழகத்தின்'சமகால கருத்துக்கள்'

## விடயம் வழங்குவோருக்கு ரூ. 1000 சன்மானம்!

(யாழ்ப்பாணம்)

சமகாலக் கருத்துரைகள் என்ற தொடரில் நடைமுறை முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களை எளிய தமிழில் மாணவர்கள் பயன்படுத்தும் வகையில் யாழ். லயன் கழகத்தினர் நூல்களை வெளியிடும் திட்டம் ஒன்றினைச் செயற்படுத்தி வருகின்றனர்.

இந்த வகையில் வெளியிடக் கூடியதான விடயங்களை எழுதித் தருபவர்களுக்கு ஆயிரம் ரூபா சன்மானம் வழங்குவதற்கும், நூல்களை வெளியிட்டுச் சந்தைப்படுத்தும் செலவுகளைப் பொறுப்பேற்றுக் கொள்ளவும் யாழ். லயன்ஸ் சழகம் தீர்மானித்துள்ளது. ஏற்கனவே 'இலங்கையின் பணச்சந்தை' அமைப்பு''என்ற நூலை இத்திட்டத்தின்கீழ் யாழ். லயன்ஸ் கழகம் வெளியிட்டிருப்பதுடன் ''இலங்கையின் மூலதனச் சந்தையமைப்பு'' என்ற நூலைத் தயாரிப்பதிலும் தீவிரமாக ஈடுபட்டுள்வர் முன்னைய நூலை எழுதி வழங்கிய திரு. கு. கல்வளை சேயோனே ஆவார்.

யாழ். கல்வி மாவட்ட வர்த்

(9ம் பக்கம் பார்க்க)

### காரைநகரில்

## ஆசிரியர், மாணவர்கள் நடாத்தும் பொருட்காட்சி

[யாழ்ப்பாணம்]

காரைநகர் மெய்கண்டான் வித்தியாலய மாணவர்கள் ஆசிரியர்களினுல் ஒழுங்கு செய்யப் பெற்ற பாடசாலைப் பொருட்காட்சி கடந்த 5ம் திகதி வியாழக்கிழமை வித்தியாலய மண்டபத்தில் ஆரம்பமாயிற்று காரைநகர் மேற்கு இணக்கசபைத் தலைவர் திரு. ஆ. தேவராசா வைபவரீதியாக குத்துவிளக்கேற்றி வைத்தார். பாடசாலை அதிபர் திரு. கி. சிவமணு அவர்கள் பாடசாலைக் கொடியை ஏற்றி வைத்து வரவேற்புரை நிகழ்த்தினுர்.

பாடசாலையின் பழைய மாணவரும் சமூகத் தொண்டரும் ஆயுள்வேத வைத்தியருமான திரு. க. மோமசுந்தரம் நாடாவை வெட்டி பொருட்காட்சியை திறந்து வைத்தார்.

பிரதம விருந்தினரும் ஆயுள்வேத வைத்தியருமான திரு க.சோமசுந்தரம்அவர்கள் உரையாற்றுகையில்''இப்பாடசாலையில் 220 மாணவர்கள் கல்விபயிலுகின்ருர்கள். ஆனுல் ஆசிரியர்கள் அதிபர் உட்பட மூவர் மட்டும் கடமையாற்று

(9-ம் பக்கம் பார்க்க)

## அனுமதியின்றி மின்பாவனை, அபிவிருத்தியைப் பாதிக்கிறது

(யாழ்ப்பாணம்)


''அனுமதியின்றி மின்சாரத்தை உபயோகித்தால் உப அலுவலகங்கள் அபிவிருத்தி வேலைகளைச்செய்து பொதுமக்களுக்குசேவையாற்றமுடியாது'' என யாழ். அபிவிருத்திச் சபை ஏழாலை உப அலுவலகத்தினுல் ஒழுங்குசெய்யப்பட்ட ''உப மின்நிலையம் விநியோகத்திட்ட பாதுகாப்புக்குழு'' தெரிவுக் கூட்டத்தில் பேசும்போது உடுவில் அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் தெரிவித்தார். ஏழாலை மகாவித்தியாலயத்தில் இக்கூட்டம் நடைபெற்றது.

ஏழாலை உப அலுவலக மின் அத்தியட்சகர் திரு.வே.சுவாமிநாதன் தமது உரையில், 'களவாக மின்சரரம் உபயோகிப்பதால் உப மின்நிலையங்கள் எரிந்து விடுகின்றன. அண்மையில் ஒரு வீடு எரிந்து சாம்பரானது என்ருர்.

தற்காலிக உபமின்நிலையப் பாதுகாப்புக் குழுக்கள் தெரிவு செய்யப்பட்டன. (ஐ)

# என் பெயர் ராணி

## சின்ன வயதில் ஏற்படும் ஆறு பொல்லாத நோய்களிலிருந்து என் அம்மா என்னைக் காப்பாற்றிவிட்டாள்!



## அந்த நோய்கள் ஏற்பட்டால் எமது வளர்ச்சி பாதிக்கப்படுமாம்

## போஷாக்கின்மை ஏற்படுமாம்

## அங்கவீனம் கூட ஏற்படலாமாம்

## ஏன், சில சமயம் இறந்து போகக்கூட நேருமாம்!

## எவ்வளவு அபாயம் பார்த்தீர்களா?

## உங்கள் அம்மாவும் உங்களை இவ்வாறு காப்பாற்றியுள்ளாவா?

ஆறு சிறுவர் நோய்களும் அவற்றுக்கெதிரான தடுப்பு மருந்தேற்றல் அட்டவணையும்

| எப்பொழுது? | என்ன? | ஏன்? |
|---|---|---|
| குழந்தைகளுக்கு<br>பிறந்ததும் | பி. சி. ஜி. ஊசி மருந்து | காச நோயிலிருந்து பாதுகாக்க |
| 3 ஆம் மாதம் | முக்கூட்டு (டி. பி. ரி) ஊசி மருந்து (1)<br>போலியோ மருந்து (1) | தொண்டைக் கரப்பான், குக்கல், ஏற்புவலியிலிருந்து பாதுகாக்க, இளம்பிள்ளை வாதத்திலிருந்து பாதுகாக்க. |
| 5 ஆம் மாதம் | முக்கூட்டு ஊசி மருந்து (2)<br>போலியோ மருந்து (2) | ,,<br>,, |
| 7 ஆம் மாதம் | முக்கூட்டு ஊசி மருந்து (3)<br>போலியோ மருந்து (3) | ,,<br>,, |
| 9 ஆம் மாதம் | சின்னமுத்து ஊசி மருந்து | சின்னமுத்திலிருந்து பாதுகாக்க |
| 18 ஆம் மாதம் | முக்கூட்டு ஊசி மருந்து (4)<br>போலியோ மருந்து (4) | தொண்டைக் கரப்பான், குக்கல், ஏற்புவலியிலிருந்து பாதுகாக்க<br>இளம்பிள்ளை வாதத்திலிருந்து பாதுகாக்க |
| கர்ப்பிணித் தாய்மாருக்கு: | | |
| கர்ப்பம் தரித்து 12 வாரத்தின் பின்னர் | ஏற்புவலி மருந்து (1) | பிறக்கும் குழந்தையையும் தாயையும் ஏற்புவலியிலிருந்து பாதுகாக்க. |
| முதல் மருந்து ஏற்றி 6 வாரத்தின் பின்னர் | ஏற்புவலி மருந்து (2) | |

கவனிக்க: இந்நோய்களுக்கு திரான முழுமையான தடுப்புச் சக்தியைப் பெற, இம் மருந்துகளை அட்டவணையிற் குறிப்பிட்டபடி, உரிய காலத்தில் இடை நிறுத்தாது தொடர்ந்து கொடுத்தல் அவசியம்

## உங்கள் பிள்ளைக்கும் தடுப்பு மருந்தை இன்றே கொடுங்கள்

## தாமதம் செய்தால் தவிக்க நேரிடலாம்

இலங்கை சிறுவர் பணியகம்
சுகாதாரக் கல்விப் பணியகம்
யுனிசெப் நிறுவனம்

## துரித தடுப்பு மருந்தேற்றும் தேசிய இயக்கம்

Grant K & E 6194

## முக்கிய அறிவித்தல்

1985-ம் ஆண்டு மார்கழி மாதம்14-ம், 15-ம்[14-12-85, 15-12-85] ஆகிய இரு தினங்களிலும் (சனிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும்) காலை 7-00 முதல் மாலை 5-00 மணி வரையும் அவசர திருத்த நிர்மாண வேலைக்ளுக்காக முல்லைத்தீவு, ஆனையிறவு, பரந்தன், கிளிநொச்சி,மாங்குளம்,நெடுங்கேணி ஆகிய பகுதிகளுக்குரிய மின்விநியோகம் தடைப்படும் என்பதை அறியத் தருகிறேன். இதனல்பொதுமக்களுக்குஏற்படும் அசௌகரியங்களுக்காக வருந்துகிறேன்.

**மின்பொறியியலாளர்**
கிளிநொச்சிப் பிரதேசம்,
மாங்குளம்

(2357)

இலங்கை
மின்சார சபையின்

## முக்கிய அறிவித்தல்

1985-12-12-ந் திகதி வியாழக்கிழமை ஈழநாட்டில் பிரசுரித்திருந்த மின்தடை அறிவித்தலின்படி எதிர்வரும் 14ந் திகதி சனிக்கிழமையும் 15-ந் திகதி ஞாயிற்றுக்கிழமையும் காலை 7-00 மணி தொடக்கம் மாலை 5-00 மணிவரை நடைமுறைப்படுத்த இருந்த மின் தடை தவிர்க்க முடியாதகாரணங்களையிட்டு நீக்கப்பட்டுள்ளது.

ஆகவே பத்திரிகையில்குறிப்பிடப்பட்ட இடங்களுக்கு எதிர்வரும் சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களுக்கும் மின்தடை ஏற்படாது என இத்தால்அறியத் தருகிறேன்.

**மின்பொறியியலாளர்,**
யாழ். பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
சுண்ணுகம்.

(2355)

**உஷாமினி**
10-30, 2-30, 4-45, 6-45
COMMANDO - 2

**சரவணபவன்**
**மினி சினிமா**
10-30, 2-30, 4-30, 7-00
A Night Mare on Elm Street
அதிபயங்கர ரகுலாசித்திரம்
(Adults only)

**எம்பயர்**
7 அடித்திரையில்
10-30, 2-30, 6-30,
தியாகராஜன்- ஊர்வசி
**ராஜா யுவ ராஜா**

**லிடோ சினிமா**
10-30, 2-30, 4-30, 6-30
**தனி மரம்**
13 முதல்
**JAWS-II**

**வெலிங்டன்**
10-30, 2-30,6-30
சிவாஜி - K. R.விஜயா
நடித்த
**எதிரொலி**
17-ந் திகதி முதல்
TEN BROTHERS OF SHAOLIN TEMPLE
(Latest Karate)

# யாழ்நகர் நேற்று மீண்டும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அங்கிருந்தும் நாலாபக்கமும் துப்பாக்கி வேட்டுகள் குண்டுச் சத்தம் கேட்டது. கன்னுதிட்டியிலுள்ள கடைகளின் சுவர்களில் துப்பாக்கிக் குண்டுகள் பதிந்திருக்கக் காணப்பட்டன.

இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின்போது இரு வயோதிபர்கள் கொல்லப்பட்டனர்; மூவர் காயமுற்றனர்; காயமுற்றவர்களில் ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் சத்திர சிகிச்சையின் பின்னர் ஆபத்தான கட்டத்தைத் தாண்டிவிட்டார் என்று அறிவிக்கப்பட்டது.

சங்கானை மானிப்பாயைச் சேர்ந்த மலேயன் பெசனர் கே. துரைச்சாமி [79 வயது], அரியாலையைச் சேர்ந்த நாட்டாண்மைக்காரரான கணபதிப்பிள்ளை (58 வயது) ஆகிய இருவருமே பலியானவர்களாவர். இருவரின் சடலங்களும் யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

எஸ். மதியழகன் [17 வயது திருநெல்வேலி], கே. ஜெயவீரசிங்கம் (22 வயது மணிக்கூட்டுவீதி யாழ்ப்பாணம்), சுபைன் [18 வயது யாழ். சோனகதெரு] ஆகியோர் படுகாயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இராணுவத்தினால் பெருமாள் கோவில் முன்றலில் கண்டு பிடிக்கப்பட்ட பூட்டப்பட்டிருக்கும் அந்த வீட்டின் முன்றலில், எவரும் இந்த வீட்டின் கதவை உடைக்க வேண்டாம்' என்று அபாய அறிவித்தல் தொங்கிய நிலையில் காணப்பட்டது.

ஒரு மூடை கோதுமை மா அங்குமிங்குமாக நிலத்தில் சிதறுண்டு காணப்பட்டது.

இராணுவத்தினரின் இந்த நடவடிக்கையால் நேற்று யாழ்ப்பாணத்திலுள்ள கல்லூரிகளில் க. பொ. த. பரீட்சைக்குத் தோற்றியிருந்த மாணவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர்.

பரீட்சைமுடிந்ததும் மாணவ மாணவிகள் பஸ் வாகனப் போக்குவரத்து வசதியின்மையால் திண்டாடினுர்கள். அதிகமானேர் சிலர் தனியார் வாகனங்களை வாடகைக்கமர்த்திச் சென்றனர்.

யாழ். செயலகம் உட்பட அரச, கூட்டுத்தாபன, தனியார்துறை ஊழியர்களில் பலர் யாழ். நகரில் தங்க வேண்டியேற்பட்டுள்ளது. தீவுப்பகுதியைச் சேர்ந்தவர்களே வாகனப் போக்கு வரத்தின்மையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தனர்.

நேற்றிரவு யாழ். நகரில் நிலவிய அமைதி, நகர மக்கள் மத்தியில் ஒருவித பதற்ற நிலையை ஏற்படுத்தியிருந்தது. சில வீதிகளில் மின் வெளிச்சங்களும் துண்டிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது,

(மா)

## வண. சிங்கராயர்

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

'வணபிதா சிங்கராயர் குற்றப்புலனுய்வுப் பிரிவினருக்கு அளித்த வாக்குமூலம் சுயவிருப்பத்தின் பேரிலா அல்லது கட்டாயத்தின் பேரிலா பெறப்பட்டது என்ற விசாரணையின் போதே மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டது.

198 ம் ஆண்டு நடைபெற்ற சாவகச்சேரி பொலிஸ் நிலைய தாக்குதலில் ஈடுபட்டோருக்கு புகலிடம் வழங்கியதாகவும், நீர்வேலி வங்கிக் கொள்ளைப் பணத்தின் ஒருபகுதியை வைத்திருந்ததாகவும் குற்றம் சுமத்தப்பட்டு, பிதா சிங்கராயருக்கு எதிராக சுமார் ஒருவருடகாலமாக இவ்வழக்கு விசாரணை நீடித்தது.

பிதா. சிங்கராயர் தரப்பில் சிரேஷ்ட சட்டத்தரணிகள் பாலாதம்பு, சேவியர் ஆகியோரும் சட்டத்தரணி அழகராஜாவும் ஆஜராகியிருந்தார்கள். (இ-பி)

## இன்ரசிற்றி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டையை நண்பகல் 1-05க்குச் சென்றடைந்தது. பிரயாணிகள் இறங்கியதும்'இன்ரசிற்றி' தனது இருப்பிடத்தை யாட்) நோக்கிப் புறப்பட்டபோது சுமார் இரண்டு மணியளவில் ரயிலுக்குள் ஒருகுண்டு வெடித்தது! இதன் விளைவாக ஒரு ரயில்ப்பெட்டி முற்ருகச் சேதமடைந்தது. சேதமதிப்பு முப்பது லட்சம் என்று தெரிவிக்கப்பட்டது.

நிலைமை இவ்வாறு இருந்த போதிலும் யாழ்-கொழும்பு ரயில்சேவை இன்று வழமைபோல் நடைபெறும் என்று நேற்றிரவு ரயில்வேபகுதி தெரிவித்தது.

## அன்றைய.....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மாக கூறிவைக்க விரும்புகிறேன்.

உண்மையில் விளையாட்டில் நடந்தது என்ன என்பதை முதலில் சிந்தித்திருக்க வேண்டும். அதாவது கிறீன் பீல்ட் கழக மூன்னணி வீரர் கொண்டுவந்த பந்தைகோல் போடாமல் தடுக்கும் நோக்குடன் பாடும் மீன்சழக பின்னணி வீரர் உதைபந்தாட்ட முறைக்கு ஒழுக அந்தப்பந்தை [சிலிப்சொட்] மூலமாக தடுத்தது அவர்செய்த தவரு? அப்படி பந்தைத் தடுத்தது அவர் செய்த தவருக இருந்தால் பந்தாட்டத்திலே கலந்து கொண்ட (மத்தியஸ்தர்) நடுவரா தீர்ப்பு வழங்குவது? அல்லது கிறீன் பீல்ட்கழக வீரரா? எது சரி எது தவறு என்டதை புரிந்துகொள்ளாத கிறீன்ட் பீல்ட் கழக வீரர் ஆவேசப்பட்டு வன்செயலுக்குத் தூபமிட்டதால் ஏற்பட்ட வன்செயலுக்கு நாங்களா பொறுப்பாளிகள்? எனவே அம்பை எய்தவனை விட்டுவிட்டு அம்பின்மேல் களங்கம் சுமத்துவது முறையா?

ஏ.வெனடிற்
குருநகர்

## துப்பாக்கிச்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்வரன் என்பவரும், கொக்குவிலைச் சேர்ந்த ரவிமூர்த்தி என்பவரும் பலியானுர்கள். இதுசம்பந்தமான சுவரொட்டிகள் யாழ்ப்பாணம் எங்கும் ஒட்டப்பட்டுள்ளன இச்சுவரொட்டிகளை தமிழீழ விடுதலைக் கழகம் ஒட்டியுள்ளது.


நிலைமை இவ்வாறிருக்க, காங்கேசன்துறையிலும் யாழ். நகரிலும் நேற்று அதிகாலை இடம்பெற்ற இருவேறு சம்பவங்களில் நான்கு இளைஞர் ஸ்தலத்திலேயே மரணமானுர்கள். [ஐ]

**உங்கள் வெளிநாட்டு பயணத்திற்கு**
**அமெரிக்கா, கனடா, மேற்கு ஜேர்மனி**
மற்றும் நாடுகளுக்கு பயணம் மேற்கொள்ள
தொடர்பு கொள்ளவும்.
Travel Link Associates.
18 - 1/2 - Baillie Street
(Mudalige M. V.)
FORT.
T. P. 545657. (2354)

**நியூவிக்ரேஸ்**
**புதிய வீடியோ படவெளியீடு**
**ஜப்பானில் கல்யாண ராமன்**
(பிரமிட் ஒரிஜினல்)
★ கமலஹாசன் ★ ராதா
**நியூவிக்ரேஸ்**
எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்
தொலைபேசி: 23532

**L. P. GAS**
**பாவனையாளர்களின்**
**கவனத்திற்கு**
யாழ். மாநகரசபை எல்லைக்குள் எல்லா நாட்களிலும் உடனுக்குடன் காஸ் டிலிவரி செய்து கொடுக்கப்படும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறேரும்.
**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,**
31, மானிப்பாய் வீதி - யாழ்ப்பாணம்.
[2356]

## முதலாவது ஆண்டு
## நினைவஞ்சலி
### அமரர் செல்லத்துரை கனகசபாபதி



அன்னையின் மடியில்:
**17-07-1927**

ஆண்டவன் அடியில்:
**24-11-1984**


முதலாவது
சிரார்த்த திதி:
**13-12-1985**

புன்சிரிப்புச் சிந்தி புகழோடு வாழ்ந்த. எம் உள்ளம் தனில் கொலுவிருந்து எம்நெஞ்சை நிறைத்துவிட்டு எம்மை எல்லாம் ஆருத்துயரில் மூழ்கடித்து, மீளாத் துயில் கொண்டு இறைவனடி சேர்ந்த உம் ஆத்மா சாந்தியடைய எம் கண்ணீர் சமர்ப்பணம்.

மனைவி, மக்கள்,
உற்ருர், உறவினர், நண்பர்கள்.

வளாக வீதி,
திருநெல்வேலி. (2347)

## 31-ம் நாள் நினைவஞ்சலி
### க. பழனி (காந்தி)



தாயின்மடியில்:
**26-08-1943**

ஆண்டவன் மடியில்:
**13-11-1985**

திதி:
**13-12-1985**

எங்கள் குடும்பத்தில் ஒளிவிளக்காய் இருந்த அன்புத் தெய்வமே. நாளைய உலகம் போற்றிடும உங்களை நல்லவர் பல பேர் போற்றுவர் என்றும், ஆயிரமாயிரம் இதயங்கள் இங்கே ஆருத்துயரில் கண்ணீர் பெருக்குதய்யா உங்களுக்காக பிரார்த்தனைகள் பலவும் புரியுதய்யா- எத்தனைஜென்மங்கள் தொடர்ந்தாலும் நீங்கள் வேண்டும் எங்களுக்காக.

13-12-1985 இன்று நடைபெறும் அன்னுரின் அந்தியேட்டிக் கிரியையில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேரும்.

அன்புடன் நினைவுகூரும்

மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், மாமா, மாமி மருமக்கள், மச்சான்மார், பெருமக்கள், மச்சாள்மார்,
உற்ருர், உறவினர், நண்பர்கள்,

பொற்பதி ரோட்,
கொக்குவில் கிழக்கு. (2351)

## தேவை

கடலுணவு பதப்படுத்தும் நிறுவனத்தில் வேலை செய்வதற்கு அனுபவமுள்ள பெண்கள் தேவை.
தகைமையுடையவர்கள் கிழமை நாட்களில் நேரில் சமுகம்தரவும்.

**சீ போன் எக்ஸ்போட் லிமிட்.,**

இல. 15, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம்.
(2326)



ரெருசோ ஷிப்ஸ்

# TERRAZZO CHIPS

IMPORTED

- கலர் பவுடர் (எல்லா வர்ணங்கள்) (GERMAN AND HOLL ND)
- அலுமினியத் தகடுகள் (10, 14, 16, 18 ß)
- வெள்ளைச் சீமெந்து
- காபரண்டம் கற்கள் (FLOOR CUTTING STONE)
- தரை வெட்டும் மெசின் (MACHINE)
- TERRAZZO மற்றும் தரைக்குத் தேவை யான சகல பொருட்களும் கிடைக்குமிடம் Rs. 6/75க்கு மேல்

## றம்சன்ஸ்

443, பழைய சோனகத் தெரு,
கொழும்பு - 12.

தொலைபேசி: 34411 — 31511



# BECON

(ஸ்ரீதர் சினிமா முன்பாக)

## 86A/L

பொருளியல் — திரு. வரதராஜன்
அளவையியல் — திரு. S.S. மனோகரன்
கணக்கியல் — திரு. மரியதாஸ்
வர்த்தகம் — திரு. தேவா, ரட்ணம்
இந்துநாகரிகம் — திரு. அருள்நங்கை
தமிழ் — திரு. சிவலிங்கராஜா

ஆரம்பம்:
சனி, ஞாயிறு வகுப்பு: 15-12-85
பகல் நேர வகுப்பு: 16-12-85



# விக்னு டியூசன் சென்றர்

**52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்**

கலை, வர்த்தக வகுப்புகளுக்கு
தனித்துவம் வாய்ந்த ஒரேநிறுவனம்

## A/L 86 மீட்டல்

புதிய வகுப்புகள்
சனி, ஞாயிறு வகுப்புக்கள்
ஆரம்பம்: 14-12-85
காலை 8-00 மணி

## DAY CLASSES

ஆரம்பம்: 16-12-85
காலை 8-00 மணி

முக்கிய குறிப்பு:

1. கலை, வர்த்தக பிரபல ஆசிரியர்கள் ஒன்றிணைந்து நடத்தும் நிறுவனம்.
2. வடமாகாணத்தில் மீட்டல் வகுப்புக்கள் இந்நிறுவனத்தில் மட்டுமே நடைபெறும்.


## 39 வருட சேவையின் பின் ஓய்வு பெறுகிறார்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் மங்கையர்கரசி வித்தியாசாலையில் 39 வருடங்களாக ஆசிரியராகவும் உப அதிபராகவும் கடமையாற்றிய செல்வி நலலப்பிள்ளை நாகமுத்து ஓய்வு பெற்றுள்ளார்.

காரைநகரைச் சேர்ந்த இவர் சமய, சமூக சேவைகளில் ஈடுபட்டுழைத்தமையால் செந்தமிழ்ச்செல்வி. செஞ்சொற் சிவமணி, சைவ பூஷணம், முத்தமிழ் வித்தகி ஆகிய பட்டங்கள் வழங்கப் பட்டன.

செல்வி ந. நாகமுத்து சிறந்த சமயச் சொற்பொழிவாளராவும் கதாப்பிரசங்கியாகவும் விளங்குகிறார். பல புராண நாடகங்களை மேடையேற்றியதன் மூலம் சிறந்த நாடக ஆசிரியர் என்றும் பாராட்டப்பட்டுள்ளார்.

[மா]

## தொடர் மொழிப் பொருளுக்கு ஒரு சொல்

காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகத்தினர் ஜீ. சீ. ஈ. சாதாரண வகுப்புப் பாடத் திட்டத்திற்குப் பெரிதும் உதவும் வகையில் இந்த நூலை வெளியிட்டுள்ளனர்.

பல சொற்கள் கொண்ட ஒரு தொடரால் குறிப்பிட வேண்டிய விடயத்தை ஒரே சொல்லால் குறிப்பிடும் வகையில் எல்லா மொழிகளிலும் சொற்கள் பல இருக்கும். இப்படியாகத் தமிழ்மொழியில் இருக்கும் சொற்களில் ஜீ. சீ. ஈ. சாதாரண தர வகுப்பினர்க்குப் பெரிதும் உபயோகப்படத்தக்க சொற்கள் பலவற்றைத் தொகுத்து தமிழ் மாணவர்க்கு உதவும் பரீட்சைக் கைநூலாக இந்தப் புத்தகம் விளங்குகின்றது.

அசகாய சூரன்- அறம்பாடுதல்- இடைச்செருக்கல்- ஏகபோகம் - ஒலக்கம் - கடமை- கட்டாணை - கன்னிகை - குதர்க்கம்- சுருங்கை-சிலேடை - முன்மரணம் - தூசிப்படை - -பகற்கனவு - பஞ்சாங்கம் - டேய்த்தேர்-மோனை - வெள்ளிடி - முதலிய சொற்களை சரியான கருத்தில் பொருத்தமான இடத்தில் உபயோகித்து கட்டுரை முதலிய எழுதவும், புத்தகங்கள் - கட்டுரைகள் - வினாத்தாள் என்பன வற்றில் இவைபோன்ற சொற்கள் வருமிடங்களைச் சரியாகப் புரிந்து கொள்ளவும் மாணவர்க்கு இந்நூல் பெரிதும் உதவும்.

பரீட்சைக்கு ஆயத்தம் செய்யும் மாணவர்க்கு உடனடியாக உதவும் இந்தப்புத்தகம் சாதாரணமான ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் உதவும் சிறப்புடையது.

அணிசேரா நாடுகள் - அவசரகாலச்சட்டம் - ஆட்கொணர்வுமனு - இடைக்கால உத்தரவு - இலக்கணப்போலி -உள்ளிருப்பு வேலைநிறுத்தம்- காப்புறுதி செய்தல் - சட்டமா அதிபர் - சுற்றுநிருபம் -செலாவணி - படைக்கலச் சேவிதர்- பிரஜைகள்குழு - வரைவில்லாளர் - வளர்முக நாடுகள் ஈரொட்டு வியாபாரம்- மாசிகை போன்ற பல சொற்களின் விளக்கம் இந்நூலில் இடம்பெற்றிருப்பது பாடசாலை மாணவருக்கும் பிறருக்கும் இந்த நூல் உபயோகப் படுவதற்கு நல்ல உதாரணங்களாகும்.

காலத்துக்காலம் பயனுள்ள நூல்களை வெளியிடும் காரைநகர் தமிழ் வளர்ச்சிக்கழகம் இருபத்திரண்டு பக்கங்களுள்ள இந்தப்புத்தகத்தை 5 ரூபாவிற்கு வெளியிட்டு மாணவர்கட்கும் மக்களுக்கும் உதவியிருக்கின்றதென்றே சொல்ல வேண்டும்.

(ப)

# இப்படியும் நடக்கிறது

அந்தப் பிரமுகர், தமிழ் சமூகத்தில் பெயர் பெற்றவர். 'ராணி அப்புக்காத்து' என்றால் பொதுவாக விளங்கும்.

இப்பெரியவர், மனித உரிமை மீறல் சம்பந்தமாசக் கட்டுரைகளையும், ஆக்கங்களையும் 'வெட்டொன்று துண்டு இரண்டாக' எழுதிப்பெரும் வரவேற்பைப்பெற்றிருந்தார்.

இந்த ஆய்வு-ஆக்கங்களுக்காக அன்னாரைக் கௌரவித்து அமெரிக்கப் பல்கலைக்கழகமொன்று கலாநிதிப் பட்டம் வழங்கியது. ஆனால்......?

கலாநிதிப்பட்டத்தை அப்பெரியவர் ஏற்றுக்கொள்ளவில்லை.

"ஊடுருவி"


## சிங்கப்பூர் --- குவைத்

வீட்டுப் பணிப் பெண்களுக்கும்
வீட்டுச் சாரதிகளுக்குமான
பிரயாண ஒழுங்குகட்கு
உடன் தொடர்பு கொள்ளவும்:

# GROUP ATLANTIC

(சிங்கள மகாவித்தியாலயத்திற்கு முன்)
163, Hospital Road,
JAFFNA.



## O/L புதிய வகுப்புக்கள் 1986

A/L 1986-ம் ஆண்டுக்கான
மீட்டல் வகுப்புக்கள் பிரிவு II

ஆரம்பம்: 16-12-1985 (திங்கள்) காலை 8 மணி

யாழ் நகரில் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற
தன்னிகரற்ற நிறுவனம்

## நீரு ரியூசன் சென்றர்

கோண்டாவில், கொக்குவில்.

விஞ்ஞானம்
O/L புதிய வகுப்புக்கள் 1986
ஆரம்பமாகிவிட்டன.

ஆசிரியர்: R. செல்வவடிவேல்



## மேற்கு ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி

ஆகிய நாடுகளுக்கு உங்களை எமது பிரதிநிதி
இங்கிருந்து
Decemb r 26-ந் திகதி
அழைத்துச்செல்வார்.

மற்றும்
பாஸ்போட், போண்ட், விசா
என்பவற்றுக்கும்
டொக, அபுதாபி
செல்ல விரும்புபவர்களும்
உடன் தொடர்பு கொள்ளவும்:

## லிப்ரூஸ் லிமிட்டெட்

R. G. கட்டடம்,
70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

NO. 60, SEA BEACH ROAD,
PETTAH.
TEL. NO. 29148

# இன்றைய பலன்

மாதம்- கார்த்திகை
திகதி- 28 (1985-12-13)
கிழமை- வெள்ளி
திதி- துதியை பின்இரவு வரை
நக்ஷத்திரம்- மூலம் பிற் பகல்வரை

மேடம்: புதியபாதை ஒன்று உங்களை எதிர்நோக்கியுள்ளது. நீண்டநாள் பிணி இன்று நிவர்த்தியாகலாம். புத்திர வழியால் மனதிற்குத் திருப்தி யுமுண்டு.

இடபம்: பொறுமையின் நிழல் உங்களைத் தொடரும். உதவி செய்யப்போய் உபத்திரவத்தைத் தேடிக்கொள்வீர்கள். இன்று அமைதியே நன்று.

மிதுனம்: பொன்னான சந்தர்ப்பம் ஒன்று உங்களைப் பூரிக்கச் செய்யும். தேடிய உறவு முறைகள் நாடியே வரலாம். இளம் பருவத்தினர்க்கு சிறப்பான தினம்.

கடகம்: தொல்லைகள் தலைதூக்கும். தொழில் புரியுமிடத்தில் ஏமாற்றத்திற்குமிடமுண்டு. அவசரமுடிவைத் தவிர்த்துக்கொள்ளவும்.

சிங்கம்: நீண்டநாள் கனவு இன்று நனவாகலாம். பெரியவர்களின் உதவி தாராளமாகவுண்டு. புண்ணிய விருப்பும் மேலிடும்.

கன்னி: தொழில் துறையில் வெற்றி. விருந்தினர் வருகை வேடிக்கையாகவிருக்கும். இதயப்படபடாவில் இன்பத்தின்மின்னல்.

துலாம்: இலட்சியப் பாதையைநோக்கி இன்று பயணம் ஆரம்பமாகும். எதிர் பார்த்த பொருள் கிடைக்கலாம். பிள்ளைகளின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத்தரும்.

விருச்சிகம்: நடையில் தயக்கம் ஏற்படும். உங்கள் விடயத்தில் இன்று உண்மையும் ஊமையாகிவிடும். உடல் நலம் சிறிது பாதிக்கப்படலாம்.

தனுசு: குமுறும் நெஞ்சத்துடன் நாளைக் கடத்துவீர்கள். உடல் நலத்தைப் பேணவும். மனத்திடம் வேண்டும்.

மகரம்: இதயம் இன்பத்தால் விம்மும். இல்லத்தில் இனிமை தவழும். உறவினர்கள் மத்தியில் செல்வாக்கும் வளரும்.

கும்பம்: அவசரக்கோலம் சிக்கலைத் தோற்றுவிக்கும். மனதில் விரக்தி தென்படும். சகோதர சுகமும் உண்டு.

மீனம்: அறிவாளிகளை மனம்நாடும். பொதுவிவகாரங்களில் ஈடுபடுவதன்மூலம் பொருட் செல்வாக்கும் வளரும். மதிப்பும் உயரும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## லயன்ஸ்...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

தக ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்பு ஒன்று வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் கடந்த மாதம் நடைபெற்றது. இவ் வகுப்பில் ''இலங்கையில் பணச் சந்தையமைப்பு'' என்ற நூலின் ஆசிரியர் திரு. கு. கல்வளை சேயோன், ''அண்மைக் காலத்தில் வங்கியமைப்பில் ஏற்பட்ட மாறுதல்கள்'' என்ற கலையரங்கத்தில் விரிவுரை நிகழ்த்தினார். பொருளியல்-வர்த்தகம் ஆகிய துறைகளில் பயிலும் மாணவர்களின் 'பாட நூல் - உசாத் துணை நூல்' என்பனவற்றில் காணப்படும் இடையீட்டினையிட்டு நிரப்பயார் முன்வரினும் அவர்கட்கு யாழ். லயன்ஸ் கழகம் ஆக்க பூர்வமான உதவிகளை வழங்குவதுடன் சன்மானத்தையும் வழங்கவிருப்பதைச் சுட்டிக் காட்டினார்.

## ஆசிரியர்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கின்றார்கள். ஆசிரியர் பற்றாக் குறையிருந்தும் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பெற்ற இப் பொருட்காட்சியை கண்டு மகிழ்ச்சியடைகின்றேன்'' என்றார்.

காரைநகர் தெற்கு இணக்க சபைத் தலைவர் திரு. ஆ. தேவராசா உரையாற்றுகையில் இப்பாடசாலையின் அமைப்பும் சூழலும் ஒரு பொருட்காட்சியாகவே காணப்படுகின்றது. பொருட் காட்சி அதற்கு மேலும் மெருகூட்டுவது போல அமைந்துள்ளது. இப் பாடசாலை மாணவர்கள் தொகைக்கு ஏற்ப பத்து ஆசிரியர்கள் கடமையாற்ற வேண்டியிருந்தும் அதிபர் உட்பட மூன்று ஆசிரியர்கள் மட்டும் கடமையாற்றி இந்தப் பொருட்காட்சியையும் சிறப்பாக அமைத்தார்கள் என்றால் மாணவர்களையும் ஆசிரியர்களையும் பெற்றோர் பாராட்ட வேண்டியது அவசியம் என்றார்.

பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர் ஆகியோரைக் கௌரவித்து பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக் கூட்டமும் நடைபெற்றது.

உதைபந்தாட்டம்:

## 'பொற்பதி' சாம்பியனாகத் தெரிவு!

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடைபெற்று வந்த '7-பேர்' கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கொக்குவில் 'பொற்பதி' ஐக்கிய விளையாட்டுக் கழகம் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

பொற்பதி ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்கும், பாஷையூர் சென். அன்ரனிஸ் கழகத்துக்குமிடையில் நேற்று நடைபெற்ற ரசிப்பான போட்டி வெற்றி-தோல்வியின்றி (2-2) முடிவடைந்தது. இடைவேளைக்குப் பின்னர் சென். அன்ரனிஸ் இருகோல்களைப் போட்டு முன்னணியில் நின்றது. ஆனால் ஆட்டம் முடிவடைவதற்கு 3 நிமிடங்கள் இருக்கும்போது பொற்பதிக் கழகம் வேகமாக விளையாடி இரு கோல்களை 'மின்னல்' வேகத்தில் போட்டது. இப் போட்டிக்கு திரு. ஈ. கே. குமரையா மத்தியஸ்தம் வகித்தார்.

இச் சுற்றுப் போட்டியில் பொற்பதி கழகம் கூடிய புள்ளிகளைப் பெற்றமையால் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. 2 வது இடத்தை 'கிறீன்பீல்ட்' கழகம பெற்றது. (வி)

## நல்லை ஆதீனத்தில்

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் இம்மாதம் 22ம் திகதி காலை எட்டுமணிமுதல் திருவாசக முற்றோதல் பாராயணம் நடைபெறவுள்ளது.

திருவெம்பாவைக்காலத்தை ஒட்டி நடைபெறும் திருவாசக முற்றோதலில் பங்குபற்ற விரும்பும் மாணவர்க்கு விஷேச சந்தப்பம் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருவாசகமுற்றோதலையாழ். நகரில் முதன்முதல் ஆரம்பித்துவைத்ததும் நல்லை ஆதீனமேஎன்பது குறிப்பிட்டத்தக்கது. (ப)

## கோட்பாடுகளை

(3 ம் பக்க தொடர்ச்சி)

கையில் எமது மறைவின் பின்னால்எங்களைப்பற்றியஎழுத்துக்கள் சிந்தனைகள் இருக்கவேண்டும். சாதாரண அடிமட்ட வாசகனுக்கு விளங்கத்தக்கதாகத் தன் கருத்தை எழுதும் ஆற்றல் எந்தவொரு கலைஞனுக்கும் இருக்கவேண்டும். கறியை சமைத்தபின் அதன் மூலிப் பொருளின் வாசனை இருக்கக் கூடாது. அதுபோலத் தான் கோட்பாடுகளையும் இலக்கியத்தில் வெளிப்படையாகச்சொல்லக்கூடாது. ஈழத்து நாடக இசைத்துறைவளர்ச்சி பற்றிய கருத்துக்களையும் தமிழ் நாட்டிற்கும் இலங்கைக்கும் உள்ள தொடர்புகள் பற்றியும் 'தேன் பொழுது' எடுத்துக் கூறுகின்றது. பேட்டிகண்ட திகதிகளையும் குறிப்பிட்டிருக்க வேண்டியது அவசியம். திரைமறைவில் இருந்து கலைப் பணியாற்றும் சிரித்திரன் ஆசிரியர் சிவஞான சுந்தரம் தரமான கலைஞர். கேலிச் சித்திர வரலாற்றைக் கொடுத்ததுடன்யாழ்ப்பாணக் கலாச்சாரத்தின் ஒரு வெட்டு முகம் அவர்'' என்றார்.

பெண் எழுத்தாளர் செல்வி சந்திரா தியாகராஜா பேசுகையிம் ''பல்துறைகளிலும் சிறப்புப் பெற்ற கலைஞர்கள் அனைவரையும் நேரில் சந்திக்கும் ஆர்வம் இருப்பினும் வாய்ப்புக்கிடைக்காது. இத்தகைய பேட்டி நூல்கள் கலைஞர்களை ஓரளவுக்கு தரிசிக்க உதவுகின்றன'' என்றார்.

உதயன் புத்தகசாலை அதிபர் திரு. து. குலசிங்கம் பேசுகையில், ''மிகவும் குறைவான எழுத்துப் பிழைகளுடன் சிறப்பாக வந்துள்ள இந்நூலில் க. பாலேந்திரா போன்ற சில தரமான கலைஞர்களுடைய 'ஆளுமை' இன்னும் விரிவாக வெளிப்படுத்தப் பட்டிருக்கலாம்'' என்றார்.

பண்டிதர் வீ. பரந்தாமன் பேசுகையில், ''சிங்களக் கலைஞர்களுக்கு இன்று அரசும் மக்களும் ஆதரவும் ஊக்குவிப்பும் தருகின்றனர். நமது கலைஞர்களுக்கு இப்படியான நூல்களாவது கௌரவத்தைத் தருகின்றன. ஒரு இனத்தின் பண்பாட்டைக் காக்கும் சிறந்த சாதனம் கலை, கலைஞர்களைப் பேணுவது எமது கடன்'' என்றார்.

திரு. செ. யோகராசா (கருணை யோகன்) பேசுகையில், ''செவ்வி காண்பவரது கேள்விகள் பதில் தருபவரின் சிறப்பியல்புகளை அறியும் தரமான, சுவையான, சலிப்புத் தராத கேள்விகளாக இருக்க வேண்டும். 'தேன் பொழுது' கேள்விகளில் இத்தகைய சிறப்பியல்புகள்பல உண்டுஎன்றார்.

டாக்டர் கனக சுகுமார்பேசுகையில், ''இன்று எம் மத்தியில் பல கலைஞர்கள் இலை மறைகாய்களாக இருக்கின்றார்கள். இன்னும் பலரை நாம் செவ்வி கண்டு வெளியிட இருக்கிறோம் என்றார்.

பொன் பூலோசிங்கம் பேசுகையில், ''தவிர்க்க முடியாத 19 கலைஞர்களை முதலில் நாம் தெரிவுசெய்தோம்' வடமராட்சியில் காலஞ்சென்ற கரவை கிருஷ்ணாழ்வார், பழன் செல்லையா போன்றவர்களைப் பற்றிய பூரணத்துவமான ஆவணங்கள் இல்லை. தமிழ்த் தென்றல் வி. க. வை. உருவாக்கியவர் சதாவதானி கதிரவேற்பிள்ளையாவார். பாரதியாரின் குரு யாழ்ப்பாணச் சாமியார் வியாபாரி மூலையைச் சேர்ந்தவர். இத்தகைய பாரம்பரியமும் பழமும் பூத்த இந்த மண்ணில் 'தேன் பொழுது' விழா நடைபெறுவது சாலவும் பொருத்தமானது'' என்றார்.

— நெல்லை க. பேரன்

## ✤ யாழ். ஆஸ்பத்திரி தொலைபேசி வேலையை அம்புலன்ஸ் செய்கிறது!

[யாழ்ப்பாணம்]

யாழ். அரசினர் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த வைத்திய நிபுணர்களின் தொலை பேசிகள், கடந்த ஒருமாதத்திற்கு மேலாகப் பழுதடைந்திருப்பதால், அவசர நோயளிகள் தொடர்பாக ஆலோசனை பெற ஆஸ்பத்திரி 'அம்புலன்ஸ்' வண்டிகளிலேயே அவர்களின் வீடுகளுக்குச் செல்லவேண்டியிருக்கிறது.

தொலைபேசிக்குப் பதிலாக அடிக்கடி 'அன்புலன்ஸ்' பயன்படுத்தப்பட்டு வருவதால், அவசர நோயாளிகளைக் கொண்டுசெல்வதற்கு 'அம்புலன்ஸ்' வசதியில்லாமலிருக்கிறது.

ஆஸ்பத்திரிக்கு உள்ளே பத்துக்கு மேற்பட்ட வார்ட்டுகளில் தொலைபேசி இணைப்பு செயல்படுவதில்லை. அவசர சிகிச்சைப்பிரிவு தொலைபேசி கடந்த 3 கிழமைகளாக பழுதடைந்து விட்டது.

இதனால் டாக்டர்களுக்கும் ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கும் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளதுடன், நோயாளிகளும் பெரிதும் பாதிப்படைந்துள்ளார்கள்.


## பகிரங்க ஏலவிற்பனை

கீழ்க் குறிப்பிடப்படும் பாவித்த பொருட்களுக்கான பகிரங்க ஏலவிற்பனை 22-12-85 ஞாயிறு முற்பகல் 10-00 மணிக்கு தெல்லிப்பழை ஐக்கிய வைத்தியசாலைச் சங்கத்தில் நடைபெறவிருக்கின்றது. வேலை நேரங்களில் பொருட்களைப் பார்வையிடலாம். ஆகக் கூடிய கேள்விமூலம் பொருட்களைப் பெறுபவர் உடனடியாகப் பணத்தைச் செலுத்திப் பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டும்.

பொருட்களின் விபரம்:

1. ஸ்பொற் லாம்பு — 02
2. பெற்றோமக்ஸ் — 06
3, இரும்புகேற் (டபிள்) — 01
4. எக்ஸ்றே கருவியும் அதன் உபகரணங்களும் — 01
5. ஐஸ் பெட்டி — 01
6. சைக்கிள் — 01
7. தண்ணீர்த் தாங்கி — 01 (இரும்புச்சட்டங்களுடன்)
8. நீர் இறைக்கும் மோட்டார் — 01 (பம்முடன்)
9 ஸ்ரெலைசர் — 01

இன்னும் பல.

செயலாளர்.
(2334)


## நூலகவியற் கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

இலங்கை நூலகச் சங்கம் நடத்தும் இடைநிலை நூலகவியற் கருத்தரங்கு எதிர்வரும் 15ம் திகதி யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்படும். யாழ். பல்கலைக்கழக நூலகர் திரு, எஸ். முருகவேள் ஆரம்ப உரை நிகழ்த்துவார்.


## Piano for Sale

One owner 'Collard and Collard' English Piano in excellant condition.

41/5, Temple Road,
Jaffna.

(2322)

## நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் விற்பனைக்கு

புதுடிசைன்களில் அமைந்த நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் சகல விதமான கலண்டர், டயறிகள் விற்பனைக்கு உண்டு. வியாபாரிகட்கு விசேட கழிவு வழங்கப்படும். மேலும் விபரங்கட்கு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி;

மக்மிலன் புத்தகசாலை,
இல. 3. பஸ்நிலையம்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
2291

## ICMA SECTION A
MAY, 86 - EXAM

A. L. முடிவுகளை எதி பார்த்திருந்த மாணவர்கள் உடன் சேர்ந்து இப்பொழுது நடக்கும் வகுப்பில் படிக்கலாம்.

சென்ற இருவாரங்களில் நடந்த பாடங்கள் திருப்பிக் கற்பிக்கப்படும்.

FEES: 3 பாடங்களுக்கும் ரூபா 600/- மட்டுமே.
(இரண்டு தவணைகளில் செலுத்தலாம்)

LECTURERS: M/S K. JEYARATNAM,
S. KATHIRGAMANATHAN,
P. SIVAPATHASUNDARAM

யாழ்ப்பாணத்தில் 78-ம் ஆண்டு முதல் ஸ்திரமாக
ICMA வகுப்புகள் நடக்கும்
ஒரே நிறுவனம்.

குறிப்பு:
தேவைப்படின் கொழும்பு OXANIA INSTITUTEக்கு மாறலாம்.

CANTABIA INSTITUTE
21, Main Street, Jaffna.
PHONE: 24201

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY


## யாழ். முஸ்லிம் பகுதி பொதுநூலகக் கிளை

[யாழ்ப்பாணம்]

''யாழ். முஸ்லிம் பகுதியில் பொது நூலகக் கிளையை ஸ்தாபிப்பதற்காக முஸ்லிம் கல்லூரி வீதியில் மாநகரசபையின் சந்தைக் கட்டிடத்தை மாற்றி அமைக்கும் வேலையை இன்று 13ம் திகதி மீண்டும் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டிருந்தது. எனினும் இது விடயம் சம்பந்தமாக சில பிரச்னைகள் எழுந்துள்ளதனால் அதில் மாநகராட்சி மன்றமும் மையப்பொருளாக நிற்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளதனாலும் மாநகராட்சிமன்றத்தின் நடவடிக்கை காரணமாக முஸ்லிம் சமூகத்திற்குள் பிளவு உண்டாகக்கூடிய நிலை ஏற்படும் என்று சிலர் கருதுவதாலும் இந்த வேலையைக் கைவிட்டுள்ளோம்'' என்று யாழ் மாநகர ஆணையாளர் திரு சீ. வீ. கே. சிவஞானம் நேற்று விடுத்த பத்திரிகைக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

''உடனடியாக சர்ச்சை இல்லாத ஒரு மத்திய இடத்தை தெரிவுசெய்து பொதுமக்களே எமக்குத் தருவார்களானால் அந்த இடத்தில் பொது நூலகக் கிளையை ஸ்தாபிக்க நாம் தயாராக உள்ளோம். அதே போன்று எமது பொறுப்பில் தற்போதிருக்கும் சந்தைக் கட்டிடம் சம்பந்தமாகவும் நாம் மேலும் எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றியும் பொதுமக்களே தீர்மானிக்க வேண்டும்'' என்றும் மேற்படி குறிப்பில் மாநகர ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

---

## மரண அறிவித்தல்

### திரு. வி. தில்லைராஜா

(ஓய்வுபெற்ற உதவி புகையிரத மேலதிகாரி)
(Commercial)

10-12-85 அறிவித்தலின்படி அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் 13-12-85 வெள்ளிக்கிழமை (இன்று) மாலை 4-30மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக புன்னாலைக்கட்டுவன் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

'திலகவாசா'
புன்னாலைக்கட்டுவன் வடக்கு,
சுன்னாகம்.

(2349)

---

## மரண அறிவித்தல்

### தம்பாப்பிள்ளை செல்லத்தம்பி

சங்குவேலி தெற்கைச் சேர்ந்தவரும், முன்னாள் உடுவில் கிராமசபை உபதலைவரும், சங்குவேலி தெற்கு சைவ மகாசபையின் போஷகரும், சமூகத் தொண்டரும், பார்வதிப்பிள்ளையின் அன்புக் கணவரும், செ. மாணிக்கவாசகர் [இளைப்பாறிய பொலிஸ் சாஜன்ட் [Court Officer M. C. Jaffna], செ. கேதீஸ்வரன் (றேஸ் பிறுண்ட் தொழிற்சாலை), பா, தெய்வநாயகி ஆகியோரின் அன்புத் தந்தையும், மா. அருந்தவமலர், கே. ஞானேஸ்வரி, அ. பாலசுப்பிரமணியம் (France) ஆகியோரின் மாமனாரும், பொ. சோமசுந்தரத்தின் மைத்துனருமாகிய தம்பாப்பிள்ளை- செல்லத்தம்பி அவர்கள் காலமாகிவிட்டார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (13- 12- 85) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:-
(2363) செ. மாணிக்கவாசகர்.

---

## மரண அறிவித்தல்

### அராலியூர் வைத்திலிங்கம் சுப்பிரமணியம்

அராலி தெற்கைச் சேர்ந்த வைத்திலிங்கம் சுப்பிரமணியம் 11-12-85ல் காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். இவர் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாசாலையின் முன்னாள் தலைமையசிரியரும், ஆவரம்பிட்டி முத்துமாரி அம்மன், ஆகாயக்குளப் பிள்ளையார் ஆலயங்களின் தர்மகர்த்தாவும், முத்துநாயகியின் அன்புக் கணவரும், நாகலிங்கத்தின் [முன்னைநாள் கிராம சபைத் தலைவர்] சகோதரரும், சிவஞானரெட்னம் [பெருந்தெருக்கள் திணைக்களம்], செந்தில்நாதன் [யாழ். பல்தொழில் நுட்ப நிறுவனம் கொக்குவில்] புனிதவதி ஆகியோரின் அன்புத் தந்தையும்; தையல்நாயகி [ஆசிரியை, புளியங்குளம் த. க. பாடசாலை], ஞானசௌந்தரி ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவகாந்தன், கயநேசன், மயூரேசன், யதுர்சன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் 11-12-85 புதன்கிழமை அராலியில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

[2352] —குடும்பத்தினர்

---

## 'தொண்டா' இந்தியா பயணம்

[கொழும்பு]

கிராமியக் கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் இம்மாதம் 21-ம் திகதி இந்தியாவுக்கு விஜயம் செய்கிறார்.

தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டு அடுத்தமாதம் 10-ம் திகதிவரை அங்கு தங்கியிருக்கும் அமைச்சர் தொண்டமான் தமிழக அரசியல் தலைவர்களையும் கூட்டணித் தலைவர்களையும், அவசியம் ஏற்படும் பட்சத்தில் தீவிரவாத தலைவர்களையும் சந்திப்பார்.

---

## வானொலிக்கு 60 வயது

(கொழும்பு)

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்துக்கு 60 - வது ஆண்டு நிறைவேறுவதையொட்டி இன்று வெள்ளிக்கிழமை ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணியர் கோவிலில் மாலை விசேஷ பூஜைகள் நடைபெறவுள்ளது.

ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் ஆரம்பமாகி இம்மாதம் 15-ம் திகதியுடன் 60-வது ஆண்டு பூர்த்தியடைவது குறிப்பிடத்தக்கது.

வெள்ளிக்கிழமை மாலை 6 - 15 தொடக்கம் 7 மணி வரை சிவசுப்பிரமணியர் ஆலயத்தில் நடைபெறும் விசேஷ பூஜை நிகழ்ச்சிகள் நேரடியாக தமிழ் சேவையில் ஒலி பரப்பப்படவுள்ளது. (இ-மா)

---

## "சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள்"

(யாழ்ப்பாணம்)

கிராமியக் கலைக்குழுவினரின் கைவண்ணத்தில் உருவான 'சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள்'' என்னும் நாடகம் 15-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் அளவெட்டி வடக்கு மகாஜன சபை மண்டபத்தில் அரங்கேற்றப்படவுள்ளது.

வறிய, கூலி விவசாய மக்களின் அடிப்படை பிரச்னைகளை மையமாக கொண்டு தயாரிக்கப்பட்ட இந்த நாடகம் அண்மையில் யாழ் பல்கலைக்கழகம், மானிப்பாய் ஆகிய இடங்களில் 48தடவையாக மேடையேற்றப்பட்டு பலரின் அமோக வரவேற்பினை பெற்றமை குறிப்பிடத்தக்கது

---

## ஏழு பேரின் நிலைமை பற்றி தகவல் இல்லை

(திருகோணமலை)

திருகோணமலை, ஆலங்கேணியில் ஆயுதப்படையினரால் கைதுசெய்யப்பட்ட 53 பேரில் ஏழுபேரின் நிலைமை பற்றிய தகவல் தெரிவிக்கப்படாததைத் தொடர்ந்து அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''கடந்த மாதம்17ம் திகதி இவர்கள் கைது செய்யப்பட்டார்கள். ஆனால் 46பேரின் பெயர்கள் மட்டுமே ஆயுதப் படையினர் அனுப்பிவைத்துள்ள பட்டியலில் உள்ளது'' என்று பிரஜைகள்குழு தெரிவித்துள்ளது.

மீதி ஏழுபேரும் எங்கே? என்றுகேட்டு அவர்களின் உறவினர்கள் பிரஜைகள் குழுவிடம் புகார் செய்துள்ளனர். (ய-மா)

---

# இருவர் பலி; இருவர் கைது! சில வீடுகள், கடைகள் எரிப்பு

## ஆலங்கேணியில் சம்பவம்

(திருகோணமலை)

திருகோணமலை ஆலங்கேணியில் ஆயுதப்படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் இருவர் பலியானார்கள். இளம் வயதுடைய இரு ஆணும், பெண்ணும் கைதுசெய்யப்பட்டனர். சிலவீடுகளும் கடைகளும் தீவைத்து எரிக்கப்பட்டன.

நேற்று இச்சம்பவம் இடம் பெற்றது. (ய-மா)

---

## வவனியாவுக்குரிய மருந்துகள் அநுராதபுரத்தில் தேக்கம்

(வவனியா)

வவனியா ஆஸ்பத்திரிக்கு வரவேண்டிய சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான மருந்துவகைகள் அநுராதபுரத்தில் தேங்கிகிடப்பதாக கூறப்படுகிறது.

இம்மருந்து வகைகளைக் கொண்டிவரவேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

ஒருமாதகாலமாக அநுராதபுரத்தில் மருந்து வகைகள் தேங்கிக்கிடக்கின்றன. இதனால் வவனியா ஆஸ்பத்திரியில் மருந்து வகைகளுக்குத்தட்டுப்பாடு நிலவுவதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

---

## இருவர் படுகாயம்

[திருகோணமலை]

திருமலை - செல்வநாயகபுரத்தில் ஊர்காவல்படையினர் நேற்று துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் ஒரு இளம் பெண்ணும் 6 வயது ஆண் குழந்தையும் படுகாய முற்றனர்.

சமலேஸ்வரி துரைராசா [17 வயது], பாலச்சந்திரன் சந்திரதாஸ் [6 வயது] ஆகியோரே படுகாயமுற்றவர்களாவர். இச்சம்பவம் குறித்து இளம் பெண்ணின் தாயாரான செல்லம் மாதுரைராசா பிரஜைகள் குழுவுக்குப் புகார் செய்துள்ளார். [ய-மா]

---

## ஆஸ்பத்திரியில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் பரந்தனைச் சேர்ந்த சந்திரன் ராமு (27வயது) என்பவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 8ம் திகதி பரந்தன் சந்தைக்குச்சென்ற இவர், உத்தரதேவி ரயிலில் சென்ற ஆயுதப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

---

## நெருப்புத் தினம்

(யாழ்ப்பாணம்)

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்) ஈழம் செய்திப் பலகையில் பின்வரும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

நேற்றைய நெருப்புத் தினத்தில், நூற்றுக் கணக்கான அன்னையர், பெண்கள் உரும்பராய் கொக்குவில் ஊர்வலம். தீப்பந்தங்களுடன் அராஜக வாதிகளுக்கு கொடும்பாவிகட்டி தீ மூட்டினர். யாழ். குடாநாட்டின் பிரதான சந்திகளில் அராஜகவாதிகளின் கொடும்பாவி எரிப்பு.

யாழ். பெருமாள் கோவிலடியில் இராணுவம் திடீர் நடவடிக்கை. யாழ். பஸ் நிலையத்தில் இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம், இருவர் பலி! மூவர் படுகாயம்.

நேற்றையதினம் மரணித்த ஈழப்போராளிகள் அனைவருக்கும் எமது வீரவணக்கம்.

---

## சோதனை மேல் சோதனை

[மட்டக்களப்பு]

செங்கலடியிலுள்ள மெதடிஸ்த மிஷன் கலவன் பாடசாலையில் க. பொ. த. (சாதாரண) பரீட்சை எழுதச் சென்ற மாணவர்களுள் ஒருவரை நேற்று சோதனை நடாத்திய ஒருவரை ஆயுதப்படையினர் கைது செய்துள்ளனர்.

அப்பாடசாலைச் சுவரில் ஒட்டப்பட்டிருந்த 'வீரஅஞ்சலி' பிரசுரத்தை அகற்றச் சென்ற ஆயுதப்படையினரே அந்த மாணவரைக் கைதுசெய்தனர்.

அவருடையச் சான்றிதழில் சிங்களத்திலும், தமிழிலும் வெவ்வேறு பெயர்கள் இருந்ததாலேயேயே கைது செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. மேலும் இருவரும் கைது செய்யப்பட்டனர். [ய-மா)

---

## கணபதி ஹோமம்

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம், பழம் வீதி சித்திவிநாயகர் ஆலய லக்ஷார்ச்சனை சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

---

## கண்காணிப்புக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காணிப்புக்குழுவினர் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்ற சம்பூர், தம்பலகாமம். கந்தளாய், ஆலங்கேணி ஆகிய இடங்களுக்கும் சென்று பார்வையிடுவர். ]ய-மா]

---

## ரூபா 2 3/4 லட்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பெறுமதியான புடவை வகைகளை சுங்கப்பகுதியினர் கைப்பற்றியுள்ளனர்.

மன்னார் கடல் மார்க்கமாக ஒரு படகில் மேற்படி புடவை வகைகள் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டபோது கடற்படையினரிடம் படகு சிக்கியது என்றும், படகில் இருந்தவர்கள் தப்பி விட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

படகும் புடவைகளும் கைப்பற்றப் பட்டு சுங்கப் பகுதியினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

---

# கொள்ளை முயற்சி: 2 இளைஞர்கள் கைது!

[கொழும்பு]

கறுவாக்காடு பகுதியில் பெட்ரோல் நிலையமொன்றில் கொள்ளையடிக்க முயற்சிசெய்ததாக இருதமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

போலி கைத்துப்பாக்கிகளைக் காட்டி இவர்கள் சுமார் 15ஆயிரம் ரூபாய் பணத்தைக் கொள்ளையடிக்க முயன்றுள்ளனராம்!

இச்சமயத்தில் அங்கு வந்த கறுவாக்காடு பொலிசைச் சேர்ந்த சப்இன்ஸ்பெக்டர் ஒருவரும் சார்ஜன்ட் ஒருவரும் பொதுமக்கள் துணையுடன் சந்தேகநபர்களைக் கைதுசெய்தனராம் இவ்விளைஞர்களில் ஒருவர் திருகோணமலையையும் மற்றவர் யாழ்ப்பாணத்தையும் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

---

இப்பத்திரிகை 'ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் யாழ்ப்பாணம் ஆதி கோவில் மேற்கு வீதி, 6... இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B10036/81. Eelanadu P. O. Box: 49, Telegram, Eelanadu, Telephone: 22389-24126.